# வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

## பொருளடக்கம் - 2016


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | எமது தொலைநோக்கு / செயற்பணி | 01 - 02 |
| 02. | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் தலைவரின் செய்தி | 03 |
| 03. | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் பணிப்பாளர் சபை | 04 |
| 04. | திரிபோஷ கம்பனியின் சுருக்கமான அறிமுகம் | 05 |
| 05. | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் கணக்காய்வு, முகாமைத்துவ மற்றும் கொள்வனவுக் குழு | 06 |
| 06. | திரிபோஷ கம்பனியின் வரலாறும் தற்போதைய முன்னேற்றமும் | 07 - 08 |
| 07. | மனித வளங்கள் பகுப்பாய்வு | 09 - 10 |
| 08. | பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பற்றிய விபரங்கள் | 11 |
| 09. | உற்பத்தி தகவல்களும் எதிர்பார்க்கப்படும் இலக்குகளும் | 12 - 16 |
| 10. | திரிபோஷ விநியோக செயற்பாடும் தகவல்களும் | 17 – 20 |
| 11. | இறுதி இலக்கு | 21 |
| 12. | 2016 ஆம் ஆண்டினுள் அடைந்த வெற்றிகளும் வெற்றிக்கான முன்மொழிவுகளும் | 22 |
| 13. | நன்றி | 23 |
| 14. | வருடாந்த நிதிக் கூற்று | 24 - 47 |
| 15. | கணக்காய்வாளரின் அறிக்கை | 48 - 63 |

## தொலைநோக்கு

இலங்கைவாழ் மக்களை

போஷாக்குமிக்க சுபீட்சமான

சிறந்த ஆரோக்கியமிக்க

சமூகமொன்றாக

உருவாக்குதல்

## செயற்பணி

ஆச்சரியம் மிக்க எதிர்கால உலகை
வெற்றிகொள்ள எமது தாய்நாட்டை
சுபீட்சமான, பெருமை கொள்ளத்தக்க, பண்புமிக்க
இலங்கையர் என்னும் தேசிய அடையாளத்தின்
பொருட்டு பொது திறைசேரியின்
அங்கீகாரத்துடன் சுகாதார அமைச்சின்
ஒத்தாசை மற்றும் வழிகாட்டலின் கீழ்
உள்நாட்டு விவசாயிகளை பலப்படுத்தும்
வழங்குகை செயற்பாட்டை நிலைப்படுத்தி
உயர்தரம் மிக்கதும் ஒழுங்கமைக்கப்பட்டதும்
தரம்வாய்ந்ததுமான போஷக்கு மிக்க
திரிபோஷ துணை உணவை சிறந்த
முறையில் தயாரித்து, பொதியிட்டு
ஆரோக்கியத்தை எதிர்பார்க்கும் தேசிய
நலனின் பொருட்டு தொடர்ச்சியாக
விநியோகித்தலும் மேன்மையான சேவையை
அபிமானத்துடன் அர்ப்பணிப்புமிக்க
செயற்பாட்டின் ஊடாக நாட்டையும்
உலகத்தையும் வெற்றி கொள்ளும் சிறந்த
திரிபோஷ குடும்பமொன்றாக உருவெடுத்தலும்
உலக சுகாதார சுட்டெண் குறியிலக்குகளை
நிறைவுசெய்த ஆரோக்கியமிக்க மக்களின்
நலனின் பொருட்டும் அர்ப்பணிப்புடன் கூடிய
முதலாவதும் தனியானதுமான உள்நாட்டுக்

# வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி தலைவரின் செய்தி



போஷாக்கு மிகுந்த ஆரோக்கியமான மக்களை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு திரிபோஷ துணை உணவை உற்பத்தி செய்து மருத்துவ சிகிச்சையின் போது இலங்கை வாழ் சகல கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், 05 வயதுக்கு குறைந்த நிறை குறைவாக உள்ள பிள்ளைகளுக்கும் இலவசமாக பகிர்ந்தளிப்பது இலங்கை திரிபோஷ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணியாகும்.

அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள் சுகாதார அமைச்சராக இருந்த சந்தர்ப்பத்தில் அவரது சிந்தனையின் அடிப்படையில் 2010.09.17 ஆம் திகதி திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்தை பூரண அரசுடமை கம்பனியொன்றாக **ஸ்ரீ லங்கா திரிபோஷ லிமிடட்** எனும் பெயரில் நிறுவப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் மொத்த இலங்கை தேவையில் 60% - 70% அளவு மாத்திரமே நிறைவுசெய்ய முடியுமாக இருந்தது.

இலவசமாக விநியோகிக்கப்படும் 100% பயனாளிகளின் தேவையை நிறைவேற்றும் நோக்கில் தற்போதைய சுகாதார அமைச்சர் கௌரவ ராஜித்த சேனாரத்ன அவர்களினால் வரவுசெலவுத் திட்டத்தினால் நிதி வழங்கப்பட்டது. இதன் காரணமாக புதிய இயந்திர தொகுதியை வலுவூட்ட நடவடிக்கை எடுத்ததன் மூலம் மொத்த வருடாந்த தேவைப்பாட்டை முழுமையாக இலவசமாக வழங்கும் இலக்கை வெற்றிகொள்வதற்கான ஆரம்ப அத்திவரத்தை இடுவதற்கு முடிந்தமை நாம் இந்த வருடத்தில் மேற்கொண்ட முக்கியமான செயற்பாடு என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

அது மாத்திரமன்றி அவ்வாறு இலவசமாக பயனாளிகளுக்கு வழங்கிய பின்னர் மிகையாக உள்ள 1000-1200 மெ.தொ. திரிபோஷ அளவை கௌரவ சுகாதார அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் சந்தைக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, தற்போது மாதாந்த திரிபோஷ உற்பத்தி 2700 மெ.தொ. ஆகும். அதில் 1800 மெ.தொ. அளவு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. 1000 மெ.தொ. மிகை சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தரமான உயர் தரத்திலுள்ள இந்த துணை போஷாக்குமிக்க உணவை விசேடமாக பாடசாலை பிள்ளைகளுக்கும் தொழில் புரிவோருக்கும் சலுகை விலையில் கொள்வனவு செய்ய முடியுமாக இருப்பதனால் அவர்களுக்கு அது மிகவும் பிரயோசனம் மிக்கதாக அமையும்.

இந்த கடினமான இலக்குகளை மிகவும் குறுகிய காலத்திற்குள் வெற்றிகொள்வதற்கு என்னை ஊக்கப்படுத்திய அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள், கௌரவ சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மருத்துவர் ராஜித்த சேனாரத்ன அவர்கள், பணிப்பாளர் சபை உட்பட சகல ஆளணியினர் மற்றும் தொடர்ந்தேர்ச்சியான உற்பத்திற்கு உரிய நேரத்தில் மூலப்பொருட்களை வழங்குகின்ற எனது வழங்குநர்கள் மற்றும் எமக்கு பலவிதத்திலும் உதவி புரிந்த அனைவரையும் நன்றியுணர்வுடன் ஞாபகப்படுத்துகின்றேன்.

எம்.டி.பந்துசேன
தலைவர்
இலங்கை திரிபோஷ கம்பனி

## வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின்

### பணிப்பாளர் சபை - 2016

- தலைவர் - திரு. எம்.டி.பந்துசேன
- பணிப்பாளர் - மருத்துவர் (திரு) பாலித குணரத்ன மஹிபால
  சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் -
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.
- பணிப்பாளர் - மருத்துவர் திருமதி சாந்தி குணவர்த்தன
  பணிப்பாளர், போஷாக்கு ஒருங்கிணைப்புப் பிரிவு,
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.
- பணிப்பாளர் - திருமதி ஏ.ஆர்.அஹமட்
  சட்ட உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.
- பணிப்பாளர் - திருமதி தேஜா ஹேரத்
  சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்
  கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம்.
- பணிப்பாளர் - மருத்துவர் திருமதி தமயந்தி ஹபுகொட
  சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவர்
  பாணத்துறை பொது வைத்தியசாலை.
- பணிப்பாளர் - திரு சின்தக குலரத்ன
  பணிப்பாளர்,
  தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம்.
- திரு.எஸ்.ஆர்.ராஜபக்ஷ
  அவதானிப்பாளர்
  பிரதான கணக்காளர்,
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
- திருமதி தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்
  பணிப்பாளர் சபையின் செயலாளர்.

## திரிபோஷ கம்பனியின் சுருக்கமான அறிமுகம்

| | | | |
|---|---|---|---|
| * | முகவரி | - | த.பெ.17, நீர்கொழும்பு வீதி, கப்புவத்த, ஜா-எல |
| * | தொலைபேசி இலக்கம் | - | 0112 - 236588,<br>0112 - 237418,<br>0112 - 233451 |
| * | பெக்ஸ் இலக்கம் | - | 0112 - 237363 |
| * | மின்னஞ்சல் முகவரி | - | thriposha@gmil.com |
| * | அமைச்சு | - | சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு |
| * | நிறுவனத்தின் தன்மை | - | சுகாதார அமைச்சின் கீழ் முழுமையான அரசுடைமை கம்பனி |
| * | கம்பனியின் பதிவு இலக்கம் | - | PB/3873 |
| * | பிரதான உற்பத்தி | - | போஷாக்கு நிறைந்த ஆரோக்கியம் மிக்க திரிபோஷா துணைஉணவு |
| * | விநியோக நிலையம் | - | நாடுபூராகவுமுள்ள சுகாதார மருத்துவ நிலையங்கள்<br>பெருந்தோட்டங்கள்<br>சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு நிலையங்கள் |
| * | விநியோகிக்கப்படும் முறை | - | புகையிரத சரக்குப் பெட்டிகள் மற்றும் லொறிகள் மூலம் |
| * | பயனாளிகள் | - | கர்பிணித் தாய்மார்கள்<br>பாலூட்டும் தாய்மார்கள்<br>போஷாக்குத் தேவைப்படும் குழந்தைகள்<br>சில நோயாளிகள் |
| * | மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | - | அண்ணளவாக பத்துலட்சம் |
| * | வங்கி | - | இலங்கை வங்கி |
| * | கணக்காய்வாளர்கள் | - | கணக்காய்வாளர் அதிபதி,<br>கணக்காய்வாளர் திணைக்களம்<br>இல 306/72, பொல்தூவ வீதி,<br>பத்தரமுல்லை. |

## வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின்

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு - 2016

| | |
|---|---|
| * திரு சின்தக குலரத்ன<br>தலைவர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு<br>பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி | • திரு.நிஷாந்த ஹேவாகம<br>நிதி முகாமையாளர்,<br>ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி |
| * மருத்துவர் திருமதி சாந்தி குணவர்த்தன<br>உறுப்பினர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு<br>பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி | • திரு.எல்.ஜே.எஸ்.பிரேமசந்திர<br>உள்ளக கணக்காய்வாளர்.<br>ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி |
| * திருமதி ஏ.ஆர்.அஹமட்<br>உறுப்பினர் கணக்காய்வு முகாமைத்துவக்குழு<br>பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி | |
| * திரு.எஸ்.ஆர்.ராஜபக்ஷ<br>அவதானிப்பாளர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு<br>பிரதான கணக்காளர், சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | |

## பிரதான கொள்வனவுக் குழு

### (60 மில்லியன் ரூபா வரை)

* தலைவர்,
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
* பிரதான கணக்காளர்,
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
* பணிப்பாளர்
  தொற்றா நோய் பிரிவு
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

## சிறிய கொள்வனவுக் குழு

### (10 மில்லியன் ரூபா வரை)

* சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு)
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
* சிரேஷ்ட முகாமையாளர் (மனித வளம் மற்றும் சட்டம்)
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
* முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு)
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

## திரிபோஷ கம்பனியின் வரலாறும் தற்போதைய முன்னேற்றமும்

திரிபோஷக் கம்பனியின் முகாமைத்துவப் பணிகள் சுகாதார அமைச்சுக்கு 1976 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டது. முகாமைத்துவப் பணிகளுக்காக கேள்வி கோரப்பட்டதோடு, அதற்காக இலங்கை புகையிலைக் கம்பனி தெரிவு செய்யப்பட்டது. அதுமுதல் 2010 ஆம் ஆண்டுவரையிலும் இதன் நிருவாகப் பணிகள் இலங்கை புகையிலைக் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்தக் கருத்திட்டத்திற்கான சுகாதார அமைச்சின் பங்களிப்பினை மிக நெருக்கமாக திரிபோஷ தொழிற்சாலையின் பராமரிப்பு செலவுகளை மீளளிக்கும் பணிகள் 1987 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று திரிபோஷ கம்பனிக்குச் சொந்தமான காணி, இயந்திர சாதனங்கள் உட்பட ஏனைய வளங்கள் சுகாதார அமைச்சுக்குச் சொந்தமாகின.

நாட்டின் போஷாக்கின்மையை இல்லாதொழிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை மிக பலப்படுத்தும் நோக்கில் திரிபோஷக் கம்பனியை அரசாங்கத்திற்கு உடைமையாக்கிக் கொண்டு அதன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டது. சுகாதார அமைச்சர் மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர், 2010-09-17 ஆம் திகதியிலிருந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான முழுமையான அரசாங்கக் கம்பனியொன்றாக இந்த திரிபோஷக் கம்பனியானது "வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி" என்னும் பெயரில் சுகாதார அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. இலக்கம் ஜீ.பீ/3873 இன் கீழ் சுகாதார அமைச்சின் துணை நிறுவனமொன்றாக கம்பனிகள் பதிவாளரின் கீழ் புதிய கம்பனியானது பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், 2011-01-07 அம் திகதியிலிருந்து 07 உறுப்பினர்களைக் கொண்ட புதிய முகாமைத்துவ சபையொன்றின் கீழ் வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### உற்பத்திசார் முன்னேற்றம்

2011 ஆம் ஆண்டில் அரசுடைமையாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இலங்கையில் திரிபோஷ பெற்றுக் கொள்வதற்கு உரித்துடைய மாதமொன்றுக்கான பயனாளிகளின் எண்ணிக்கை 928,000 ஆகும். இதன்கீழான பயனாளிகள் -

- கர்ப்பிணித் தாய்மார்கள் ;
- பாலூட்டும் தாய்மார்கள் (குழந்தைக்கு ஆறு (06) மாதங்கள் செல்லும்வரை);
- போசாக்கின்மை காரணமாக நலிவுற்றுள்ள ஆறு (06) மாதங்களுக்கு மேற்பட்ட குழந்தைகளும் ஐந்து (05) வயதிற்குக் குறைந்த முன்பள்ளி சிறுவர்களும்;
- எடைக்கமைவாக குழந்தையின் வளர்ச்சிக் குறிப்பில் மூன்றாவது கோட்டுக்குக் கீழுள்ள குழந்தைகள்; அத்துடன்
- மேற்போந்த வகுதிக்குரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகள்; ஆகியோர்கள் ஆவர்.

மேற்போந்த திரிபோஷ பயனாளிகளுக்கு முழுமையாக மாதமொன்றுக்குத் தேவைப்படும் திரிபோஷ வழங்கப்படுவதற்கு 1,392 மெற்றிக் தொன் திரிபோஷ மாதாந்தம் உற்பத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. 2010 செப்ரெம்பர் மாதம்வரை திரிபோஷ கம்பனியை அரசாங்கத்திற்கு உடைமையாக்கிக் கொள்வதற்கு முன்னர் மாதத்திற்கான திரிபோஷ உற்பத்தி 731 மெற்றிக் தொன்களாகும். 2010 செப்ரெம்பர் மாதம் கம்பனியானது அரசுடைமையாக்கப்பட்டவுடன் உற்பத்தியில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. நவீன இயந்திர சாதனங்களின் நிறுவுகை, ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு போன்றவை இந்த உற்பத்தி அதிகரிப்பிற்கான காரணங்களாகும். இதற்கமைவாக, 2016 ஆம் ஆண்டின் மொத்த உற்பத்தி 9801 மெற்றிக் தொன்கள் வரை அதிகரித்துக்கொள்வதற்கு இயலுமாகியது. 2016 ஆம் ஆண்டு காணப்பட்ட பிரேடர் இயந்திரத்தை கலற்றி அப்புறப்படுத்தி புதிய என்டர்சன் இயந்திரத்தைப் பொருத்தியதன் காரணத்தினால் உற்பத்தியில் சற்று வீழ்ச்சி காணப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் பயனாளிகளின் எண்ணிக்கை ஒரு மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளதோடு, இதற்காக மாதமொன்றுக்கான உற்பத்தித் தேவையானது 1,500 மெற்றிக் தொன்களாகும். இந்த தேவையினை அடைந்து மிகையை சந்தைக்கு விடுவது தற்போதைய குறியிலக்காகும். பின்வரும் வேலைத் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதனால் அந்த இலக்கை அடைய முடியும்.

**இலக்கினை அடைவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

01. பழைய பிரேடர் இயந்திரத்தை கலற்றி தற்போது பாவனையிலுள்ள என்டர்சன் இயந்திரத்தைப் போன்று இரண்டு மடங்கு கொள்ளளவு உள்ள புதிய என்டர்சன் இயந்திரமொன்றை அமெரிக்காவிலிருந்து கொள்வனவு செய்வதற்கும் அதற்கு இணைவாக புதிய மெகாமேல் இயந்திரமொன்றையும் கொதிகலன் ஒன்றையும் கொள்வனவு செய்தல்.

02. புதிய இயந்திர சாதன தொகுதிகளுக்கு ஏற்ற விதத்தில் பழைய கட்டிடத்தை பழுதுபார்த்தல்.

03. புதிய கட்டிட தொகுதியை இயக்குவதற்கு ஏற்ற வகையில் புதிய மின் பிறப்பாக்கி ஒன்றையும் பெனல் தொகுதிக்கு கட்டிடமொன்றை அமைத்தல்.

04. கழிவுகள் மற்றும் முடிவுப் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு மற்றும் அங்குமிங்கும் கொண்டு செல்வதற்கு போர்க் லிப்ட் இயந்திரங்கள் இரண்டை கொள்வனவு செய்தல்.

05. திரிபோஷ உற்பத்தியை மிகவும் வினைத்திறனுடன் சரியான முறையில் இலகுவாக பொதி செய்வதற்கு ஏற்ற வகையில் புதிய பொதியிடல் இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல்.

**நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சேவை வகுதிகள், பதவிகள் மற்றும் பதவியணி**

| | | | |
|---|---|---|---|
| 01. | **சிரேட்ட முகாமையாளர்கள்** | | |
| | • சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு) | 01 | |
| | • சிரேட்ட முகாமையாளர் (மனித வளங்கள், சட்டம்) | 01 | 02 |
| 02. | **நடுத்தர மட்ட முகாமையாளர்கள்** | | |
| | • முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி சேவை) | 01 | |
| | • முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு) | 02 | |
| | • முகாமையாளர் (நிதி) | 01 | |
| | • முகாமையாளர் (சந்தை ஊக்குவிப்பு) | 01 | 05 |
| 03. | **கனிஷ்ட முகாமையாளர்கள்** | | |
| | • விநியோக உத்தியோகத்தர் | 01 | |
| | • உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் | 01 | |
| | • நிதி உத்தியோகத்தர் | 01 | |
| | • வழங்கல் உத்தியோகத்தர் | 01 | |
| | • பண்டகசாலை உத்தியோகத்தர் | 01 | |
| | • களஞ்சியசாலை உத்தியோகத்தர் | 01 | |
| | • உற்பத்தி உத்தியோகத்தர் | 03 | |
| | • நிருவாக உத்தியோகத்தர் | 01 | |
| | • நிதி உத்தியோகத்தர் | 01 | |
| | • பொறியியல் சேவை உத்தியோகத்தர் | 01 | 12 |
| 04. | **முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்பம்)** | | 04 |
| 05. | **முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்பம் சாராத)** | | 18 |
| 06. | **தொடக்கநிலை சேவைகள்** | | |
| | **தொடக்கநிலை சேவைகள் (தேர்ச்சி பெற்ற)** | | |
| | • சாரதி | 07 | |
| | • மின் தொழினுட்பவியலர் | 04 | 11 |
| | **தொடக்கநிலை சேவைகள் (பகுதி தேர்ச்சி)** | | |
| | • கொதிகலன் தொழினுட்பவியலர் | 03 | |
| | • பொருத்துநர்கள் | 03 | |
| | • லேத் மெசின் இயக்குநர்கள் | 02 | |
| | • இயந்திர இயக்குநர்கள் | 28 | |
| | • தரப் பரிசோதகர்கள் | 07 | |
| | • தீயணைப்பு உதவியாளர் | 01 | |
| | • போர்க்லிப்ட் இயந்திர இயக்குநர் | 02 | 46 |
| | **தொடக்கநிலை சேவைகள் (தேர்ச்சியற்ற)** | | |
| | • தோட்டக்காரர் | 02 | |
| | • தொழிலாளர் / அலுவலக உதவியாளர் | 02 | |
| | • பொது தொழிலாளர் | 129 | |
| | • தொழிலாளர் மேற்பார்வையாளர் | 01 | 134 |
| | | **மொத்தம்** | 232 |

## சேவைகளுக்கு அமைவாக எமது குழு செயற்படும் விதம்

**உற்பத்தி தொழிற்சாலை** (குழுவில் உள்ளோர் - 205)

| | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு) | 01 |
| 02. | முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி சேவை) | 01 |
| 03. | முகாமையாளர் (தரப் பாதுகாப்பு) | 01 |
| 04. | பண்டகசாலை உத்தியோகத்தர் | 01 |
| 05. | உற்பத்தி உத்தியோகத்தர் | 03 |
| 06. | களஞ்சியசாலை உத்தியோகத்தர் | 02 |
| 07. | விநியோக உத்தியோகத்தர் | 01 |
| 08. | பொறியியல் சேவை உத்தியோகத்தர் | 01 |
| 09. | முகாமைத்துவ உதவியாளர்கள் | 14 |
| 10. | மின்சார தொழினுட்பவியலர் | 04 |
| 11. | தீயணைப்பு உதவியாளர் | 01 |
| 12. | போர்க் லிப்ட் இயந்திர இயக்குநர் | 02 |
| 13. | தரப் பரிசோதகர்கள் | 07 |
| 14. | இயந்திர இயக்குநர்கள் | 28 |
| 15. | லேத் மெசின் இயக்குநர்கள் | 02 |
| 16. | பொருத்துநர்கள் | 03 |
| 17. | கொதிகலன் தொழினுட்பவியலர் | 03 |
| 18. | பொது தொழிலாளர்கள் | 130 |
| | | 205 |

## நிருவாக, கணக்கு மற்றும் ஏனைய கிளைகள்

(குழுவில் உள்ளோர் - 27)

| | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | சிரேட்ட முகாமையாளர் (மனித வளங்கள், சட்டம்) | 01 |
| 02. | முகாமையாளர் (நிதி) | 01 |
| 03. | முகாமையாளர் (சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு) | 01 |
| 04. | நிதி உத்தியோகத்தர் | 01 |
| 05. | கணக்கு உத்தியோகத்தர் | 01 |
| 06. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் | 01 |
| 07. | நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| 08. | வழங்கல் உத்தியோகத்தர் | 01 |
| 09. | முகாமைத்துவ உதவியாளர்கள் | 08 |
| 10. | சாரதிகள் | 07 |
| 11. | அலுவலக உதவியாளர்கள் | 02 |
| 12 | தோட்டக்காரர்கள் | 02 |
| | | 27 |

## 2016 ஆம் ஆண்டில் பெறுகை செயல்முறையைப் பின்பற்றி பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் தொடர்பிலான விபரங்கள்

**சோயா அவரை மற்றும் சோளம்**

01. விவசாயிகள் அமைப்பு,
மீகலாவ,
இல.367, 03 ஆம் மாடி,
டாம் வீதி, கொழும்பு - 12.

02. எஸ்.டீ.கே.யுனைடட் எக்ரிவென்சஸ்
பிறைவட் லிமிடட்
பண்டுலகம
அனுராதபுரம்,

03. ஒன்றிணைந்த விவசாயிகள் கம்பனி,
அம்பாறை,
இல,169,துட்டுகெமுனு வீதி, பேலியகொட.

04. கே.எஸ்.ரீ.எவர்கிறீன் (பிறைவேட்)
லிமிட்டெட்
இல.583, சென்ட்யூட் மாவத்தை,
றிலவுல்ல,
கந்தானை.

05. எஸ்.பீ.எம்.லங்கா டிரேடிங் (பிறைவேட்)
லிமிட்டெட்,
இல.184/1,
டாம் வீதி,
கொழும்பு - 12.

01. **பால்மா**
மில்கோ கம்பனி,
இல.45, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட.

02. **விட்டமின் மற்றும் கனிமங்கள்**
ஜே.கே.டிரேட்லிங் (பிறைவேட்) லிமிட்டெட்,
இல.44, தலவத்துகொட வீதி,
பிட்டகோட்டை.


03. **கிராவட் பேப்பர்**
அப்துல்லா இன்டஸ்ட்ரீஸ் பெகேஜஸ்
(பிறைவட்) லிமிடட்
இல,72 மகா வித்தியால வீதி,
கொழும்பு 13.

04. **பொலித்தீன்**
நிவ் ஜீவா இன்டஸ்ட்ரி (பிறைவட்)
லிமிட்டெட்,
பொல்வத்தை
குண்டசாலை
கண்டி.


2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை திரிபோஷ உற்பத்தி (மாஸ்டர் பக்கெட்டுகளில்)

| மாதம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| சனவரி | 37,689 | 43,026 | 40,316 | 47,901 | 57,542 |
| பெப்ரவரி | 47,414 | 44,109 | 47,708 | 43,679 | 53,416 |
| மார்ச் | 47,198 | 44,701 | 56,917 | 53,206 | 55,410 |
| ஏப்ரல் | 30,336 | 22,018 | 38,492 | 42,176 | 44,501 |
| மே | 43,425 | 30,069 | 56,456 | 57,367 | 52,757 |
| யூன் | 45,936 | 33,370 | 51,654 | 53,393 | 15,757 |
| யூலை | 45,736 | 60,285 | 57,309 | 61,000 | - |
| ஆகஸ்ட் | 47,236 | 55,429 | 57,677 | 57,719 | 3,060 |
| செப்ரெம்பர் | 44,645 | 58,712 | 57,621 | 60,182 | 38,071 |
| ஒக்ரோபர் | 48,009 | 49,958 | 58,522 | 62,381 | 38,806 |
| நவெம்பர் | 15,308 | 42,348 | 56,324 | 60,908 | 47,392 |
| திசெம்பர் | 37,520 | 18,238 | 42,072 | 48,633 | 28,898 |
| மாஸ்டர் பெக்ஸ் | **490,452** | **502,263** | **621,068** | **648,545** | **435,610** |
| மெற்றிக் தொன் | **11,035** | **11,300** | **13,974** | **14,592** | **9,801** |


2012 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)




2013 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)





2014 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)



2015 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)




2016 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)



2016 ஆம் ஆண்டு திரபோஷ மாஸ்டர் பொதிகள் 435,610 வரை குறைவடைவதற்கான பிரதான காரணம் 40 வருடங்கள் பழமை வாய்ந்த இயந்திரங்களுக்குப் பதிலாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய என்டர்சன் இயந்திரத் தொகுதி நிறுவப்பட்டதனாலாகும்.

## 2017 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இலக்கு

- இலவசமாக வழங்கப்படும் திரிபோஷ உற்பத்தியை அனைத்து பயனாளிகளுக்கும் வழங்குவதில் 100% இலக்கை வெற்றிகொள்ளல்.
- புதிய இயந்திரங்களை பொருத்தியதன் மூலம் கிடைக்கப்பெறும் மிகை உற்பத்தியை புதிய தோற்றத்தில் சந்தைக்கு அறிமுகப்படுத்தி சந்தையை வெற்றிகொள்வது 2017 ஆம் ஆண்டில் எமது இலக்காகும்.
- மேலும் திரிபோஷ வளாகத்தில் புதிய அங்காடி ஒன்றை நிறுவி புதிய உற்பத்தியை விற்பனை செய்தல்.
- புதிய லொறி இயந்திரமொன்றை கொள்வனவு செய்து விநியோக நடவடிக்கையை மேலும் வினைத்திறனாக்குதல்.

2017 ஆம் ஆண்டு திரிபோஷ உற்பத்தியை பின்வருமாறு அதிகரிப்பது நிறுவனத்தின் முதன்மை நோக்கமாகும்.

| மாதம் | 2017 | |
|---|---|---|
| | மாஸ்டர் பக்கெட்டுகள் | பக்கெட்டுகள் |
| சனவரி | 82,797 | 2,483,910 |
| பெப்ரவரி | 73,464 | 2,203,920 |
| மார்ச் | 87,915 | 2,637,450 |
| ஏப்ரல் | 74,066 | 2,221,980 |
| மே | 79,184 | 2,375,520 |
| யூன் | 84,905 | 2,547,150 |
| யூலை | 93,636 | 2,809,080 |
| ஆகஸ்ட் | 84,302 | 2,529,060 |
| செப்டம்பர் | 84,905 | 2,547,150 |
| ஒக்டோபர் | 85,808 | 2,574,240 |
| நவம்பர் | 86,410 | 2,592,300 |
| டிசம்பர் | 82,797 | 2,483,910 |
| **மொத்தம்** | **1,000,189** | **30,005,670** |

**தரவுகளும் தகவல்களும்**

திரிபோஷா உற்பத்தி மற்றும் விநியோகம் போன்றவை தொடர்பிலான தரவுகளை உடனடியாகவும் இலகுவாகவும் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் மென்பொருள் ஒன்றை (Software) தாபித்தல்.

**உற்பத்தி மூலப்பொருட்களை மேலும் கொள்வனவு செய்தல்**

உள்நாட்டு விவசாயிகளை மேலும் பாதுகாக்கும் நோக்கில் அவர்களுடைய உற்பத்திகளை விவசாய அமைப்புகளின் ஊடாக திரிபோஷ நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## விநியோக செயற்பாடு

**திரிபோஷ தொழிற்சாலை (ஜா-எல)**



↓

**விநியோக நடவடிக்கைகள் (லொறி, புகையிரத சரக்குப் பெட்டிகள்)**







பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள் → சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் → சுகாதார நிலையம் (கிளினிக்) → குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்

பெருந்தோட்டம்

சிறுவர் நிலையங்கள்







திரிபோஷ பயனாளிகள்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் மூலம் திரிபோஷ உற்பத்தி செய்யப்பட்டு சுகாதார அமைச்சின் ஊடாக முறையாக விநியோகிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

## திரிபோஷ விநியோக நிலையங்கள்

| மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம் | | பெருந்தோட்டம் | | பிற | |
|---|---|---|---|---|---|
| 1. | மத்திய மாகாணம் | 1. | ஹட்டன் | 1. | இராணுவ மருத்துவமனை |
| 2. | கிழக்கு மாகாணம் | 2. | மாத்தளை | 2. | பொலிஸ் மருத்துவமனைகள் |
| 3. | வடமத்திய மாகாணம் | 3. | கேகாலை | 3. | முன்பள்ளிகள் |
| 4. | வடமேல் மாகாணம் | 4. | கண்டி | 4. | நகர சபைகள் |
| 5. | வட மாகாணம் | 5. | களுத்துறை | | - நீர்கொழும்பு |
| 6. | சப்பிரகமுவ மாகாணம் | 6. | நுவரெலியா | | - கொழும்பு |
| 7. | தென் மாகாணம் | 7. | மாத்தறை | | - மாத்தளை |
| 8. | ஊவா மாகாணம் | 8. | பதுளை | | - காலி |
| 9. | மேல் மாகாணம் | 9. | காலி | | - கண்டி |
| | | 10. | இரத்தினபுரி | | |

| சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் அதிகார பிரதேசம் | | பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம் | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அநுராதபுரம் | 1. | அம்பாறை | 14. | கண்டி |
| 2. | பத்தரமுல்லை | 2. | அநுராதபுரம் | 15. | கேகாலை |
| 3. | பதுளை | 3. | பதுளை | 16. | கிளிநொச்சி |
| 4. | காலி | 4. | மட்டக்களப்பு | 17. | குருநாகல் |
| 5. | யாழ்ப்பாணம் | 5. | கொழும்பு | 18. | மாத்தளை |
| 6. | திருகோணமலை | 6. | காலி | 19. | மாத்தறை |
| 7. | குருநாகல் | 7. | கம்பஹா | 20. | மன்னார் |
| 8. | இரத்தினபுரி | 8. | அம்பாந்தோட்டை | 21. | மொனராகலை |
| 9. | கேகாலை | 9. | யாழ்ப்பாணம் | 22. | நுவரெலியா |
| 10. | கண்டி | 10. | கல்முனை | 23. | பொலன்நறுவை |
| | | 11. | களுத்துறை | 24. | புத்தளம் |
| | | 12. | இரத்தினபுரி | 25. | வவுனியா |
| | | 13. | திருகோணமலை | | |

| சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அம்பாறை | 07 | 10. | கல்முனை | 13 | 19 | மாத்தறை | 16 |
| 2. | அநுராதபுரம் | 18 | 11. | களுத்துறை | 13 | 20 | மன்னார் | 03 |
| 3. | பதுளை | 15 | 12. | இரத்தினபுரி | 17 | 21 | மொனராகலை | 11 |
| 4. | மட்டக்களப்பு | 13 | 13. | திருகோணமலை | 10 | 22 | நுவரெலிய | 11 |
| 5. | கொழும்பு | 11 | 14. | கண்டி | 21 | 23 | பொலன்னறுவை | 07 |
| 6. | காலி | 19 | 15. | கேகாலை | 11 | 24 | புத்தளம் | 11 |
| 7. | கம்பஹா | 16 | 16. | கிளிநொச்சி | 04 | 25 | வவுனியா | 04 |
| 8. | அம்பாந்தோட்டை | 12 | 17 | குருநாகல் | 23 | | | |
| 9. | யாழ்ப்பாணம் | 11 | 18 | மாத்தளை | 12 | | | |

## 2016 ஆம் ஆண்டு திரிபோஷா விநியோக தகவல்கள்

| பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம் | பயனாளிகளின் எண்ணிக்கை | மாதத்திற்கு ஒதுக்கப்படும் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தாய்மார்களுக்கு | குழந்தைகளுக்கு | மொத்தம் |
| அம்பாறை | 26,508 | 589 | 1,177 | 1,766 |
| அநுராதபுரம் | 56,142 | 1,250 | 2,492 | 3,742 |
| பதுளை | 38,654 | 851 | 1,727 | 2,578 |
| மட்டக்களப்பு | 44,820 | 1,363 | 1,625 | 2,988 |
| கொழும்பு வைத்தியசாலை | 4,848 | 68 | 256 | 324 |
| கொழும்பு மாநகர சபை | 8,731 | 198 | 386 | 584 |
| கொழும்பு (தெற்கு) | 43,243 | 962 | 1,919 | 2,881 |
| காலி | 47,290 | 1,043 | 2,109 | 3,152 |
| கம்பஹா | 56,010 | 2,260 | 1,475 | 3,735 |
| அம்பாந்தோட்டை | 34,758 | 836 | 1,670 | 2,506 |
| யாழ்ப்பாணம் | 33,062 | 735 | 1,468 | 2,203 |
| கல்முனை | 34,585 | 759 | 1,547 | 2,306 |
| களுத்துறை | 36,715 | 1,039 | 1,409 | 2,448 |
| கண்டி | 61,913 | 1,369 | 2,757 | 4,126 |
| கேகாலை | 29,681 | 659 | 1,320 | 1,979 |
| கிளிநொச்சி | 7,987 | 176 | 355 | 531 |
| குருநாகல் | 70,435 | 1,560 | 3,137 | 4,697 |
| மன்னார் | 10,224 | 226 | 455 | 681 |
| மாத்தளை | 31,715 | 687 | 1,431 | 2,118 |
| மாத்தறை | 51,240 | 1,139 | 2,278 | 3,417 |
| மொனராகலை | 28,509 | 641 | 1,259 | 1,900 |
| நுவரெலிய | 26,057 | 564 | 1,173 | 1,737 |
| பொலன்னறுவை | 33,500 | 652 | 1,580 | 2,232 |
| புத்தளம் | 27,857 | 661 | 1,197 | 1,858 |

| | | | | |
|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 45,377 | 1,010 | 2,017 | 3,027 |
| திருகோணமலை | 28,266 | 630 | 1,255 | 1,885 |
| வவுனியா | 8,101 | 180 | 360 | 540 |
| முல்லைத்தீவு | 6,825 | 153 | 302 | 455 |
| **மொத்தம்** | **933,053** | **22,260** | **40,136** | **62,396** |

| சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் நிலையம் | பயனாளிகளின் எண்ணிக்கை | மாதத்திற்கு ஒதுக்கப்படும் அளவு - குழந்தைகளுக்கு |
|---|---|---|
| 09 | 22, 692 | 6, 051 |
| மொத்தம் | **22, 692** | **6, 051** |

| பெருந்தோட்ட பிரதேசம் | பயனாளிகளின் எண்ணிக்கை | மாதத்திற்கு ஒதுக்கப்படும் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தாய்மார்களுக்கு | குழந்தைகளுக்கு | மொத்தம் |
| ஹட்டன் | 10,565 | 679 | 1,427 | 2,106 |
| மாத்தளை | 2,888 | 178 | 400 | 578 |
| கேகாலை | 4,347 | 253 | 616 | 869 |
| கண்டி | 5,324 | 331 | 734 | 1,065 |
| களுத்துறை | 2,539 | 163 | 345 | 508 |
| நுவரெலியா | 11,500 | 749 | 1,551 | 2,300 |
| மாத்தறை | 1,077 | 70 | 145 | 215 |
| பதுளை | 10,685 | 716 | 1,421 | 2,137 |
| காலி | 1,095 | 69 | 150 | 219 |
| இரத்தினபுரி | 4,743 | 310 | 638 | 948 |
| **மொத்தம்** | **54,763** | **3,518** | **7,427** | **10,945** |

**2016 ஆம் ஆண்டின் திரிபோஷ விநியோக நிலையங்களின் எண்ணிக்கையும் பயனாளிகளின் எண்ணிக்கையும்**

| | நிலையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பிரிவுகள் 28 சார்பில் | 740 | 933,053 |
| பெருந்தோட்டம் | 447 | 54,763 |
| சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் திணைக்களத்தின் சிறுவர் இல்லங்கள் | 09 | 22,692 |
| **மொத்தம்** | **1, 196** | **1,010,508** |

## இறுதி இலக்கு

அரசாங்கத்திற்கு சுமையாக இருக்காது
அரசாங்கத்திடமிருந்து உதவிபெறும்
நிறுவனமாக அன்றி சுயாதீனமாக
வருமானத்தை உழைக்கும் நிறுவனமாக
திகழ்வது எமது இறுதி இலக்காகும்.

## 2016 ஆம் ஆண்டினுள் அடைந்த வெற்றிகளும் எதிர்கால வெற்றிக்கான முன்மொழிவுகளும்

2016 ஆம் ஆண்டு நாம் அடைந்த வெற்றிகள்

2016 ஆம் ஆண்டு 40 வருடங்களுக்கும் மேல் பயன்படுத்திய பழமை வாய்ந்த இயந்திரங்களுக்கு பதிலாக புதிய இயந்திரமொன்றை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து பொருத்தி 2016.12.05 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களின் கரங்களால் திறந்து வைத்தல். அத்தோடு புதிய கொதிகலனையும் திறந்து வைத்தல்.

இதன் மூலம் இதுவரையில் காணப்பட்ட உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரித்து மிகையை சந்தைக்கு அறிமுகப்படுத்துவது அடுத்த இலக்காகும்.

2017 ஆம் ஆண்டு வெற்றிக்கான முன்மொழிவுகள்

1. முறையாக விநியோக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு எமது நிறுவனத்திற்கு புதிய லொறி வண்டியொன்றை கொள்வனவு செய்தல்.

2. மிகை உற்பத்தியை புதிய வடிவத்தில் சந்தைக்கு அறிமுகம் செய்து சந்தையை வெற்றிகொள்ளல்.

3. சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக புதிய உற்பத்தியை நுகர்வோர் மத்தியில் பிரபல்யப்படுத்தல்.

4. புதிய உற்பத்திக்கு தேவையான களஞ்சிய வசதிகளை விரிவுபடுத்தல்.

## நன்றி

எல்லோரையும் ஊக்குவித்து தேவையான அறிவுறுத்தல்களையும் அனுசரணையையும் வழங்கியமை தொடர்பில் சுகாதார அமைச்சர் மாண்புமிகு ராஜித்த சேனரத்ன அவர்களுக்கும் பிரதி சுகாதார அமைச்சர் மாண்புமிகு பைசல் காசிம் அவர்களுக்கும் எம்மை வழிப்படுத்தி எமக்கு தேவையான ஆலோசனைகளையும் அனுமதிகளையும் காலம் தாழ்த்தாது வழங்கிய சுகாதார அமைச்சின் செயலாளர் திரு அநுர ஜயவிக்கிரம அவர்களுக்கும் மற்றும் வருடம் தோறும் தேவையான ஒதுக்கீடுகளை எமக்கு வழங்கிய நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் பொது திறைசேரியின் செயலாளர் திரு. ஆர்.எச்.எஸ்.சமரதுங்க அவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் அங்கம் வகித்த பணிப்பாளர் சபையின் அனைவரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பு எம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. அத்துடன் எமது வழங்குநர்கள் உட்பட வெளிவாரியாக எமக்குச் சேவை வழங்கும் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

எமது நிறுவனத்தில் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் உள்ள பதவிகளில் திருப்திகரமாக சேவைபுரியும் பதவியணியொன்று காணக்கூடியதாகவுள்ளமை பெருமகிழ்ச்சியாகும். நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்பு மெச்சப்படுதல் வேண்டும். இறுதியாக திரிபோஷ நிறுவனத்திற்கென கட்டியெழுப்பப்பட்ட நற்பெயரைப் பாதுகாத்து எந்நேரமும் உழைக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ கம்பனியின் மொத்த பதவியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# இலங்கை திரிபோஷ லிமிட்ட்

## வருமான மற்றும் செலவினக் கூற்று

### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 2016.12.31 ரூபா சதம் | 2015.12.31 ரூபா |
|---|---|---|---|
| ஆண்டுக் காலத்தில் செய்யப்பட்ட செலவின மீளளிப்பு | 02 | 1,469,302,572.89 | 1,776,421,903 |
| கழிப்பனவு:உற்பத்திக் கிரயம் | 03 | (1,392,865,137.52) | (1,793,195,367) |
| | | 76,437,435.37 | (16,773,464) |
| சேர்ப்பனவு:ஏனைய வருமானம் | 04 | 19,710,672.50 | 25,779,714 |
| | | 96,148,107.87 | 9,006,250 |
| கழிப்பனவு: செலவினங்கள் | | | |
| விநியோகச் செலவினம் | 05 | 6,929,064.13 | 11,119,781 |
| நிர்வாகச் செலவினங்கள் | 06 | 42,509,552.45 | 36,103,901 |
| நிதி மற்றும் ஏனைய செலவினங்கள் | 07 | 225,860.02 | 3,272,031 |
| | | 49,664,476.60 | 50,495,714 |
| ஆண்டுக்கான செலவிலுங் கூடிய வருமானம் | | 46,483,631.27 | (41,489,464) |

இந்த நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 6 தொடக்கம் 21 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த முழுமொத்த வருமானக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது.

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## நிதி நிலைமைக் கூற்று

### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று

| | குறிப்புகள் | 2016.12.31 ரூபா சதம் | 2015.12.31 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறை சாராத சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 10 | 667,194,699.22 | 435,918,034 |
| பலப்படாக சொக்குக்கள் | 11 | 495,890.68 | 661,188 |
| | | 667,690,589.90 | 436,579,222 |
| முதலீடுகள் | 12 | 92,641,169.64 | 90,251,731 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| இருப்புக்கள் | 13 | 206,108,078.60 | 228,273,118 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 14 | 75,520,500.60 | 134,547,131 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 15 | 12,310,647.40 | 53,922,992 |
| | | 293,939,226.60 | 416,743,241 |
| மொத்தச் சொத்துக்கள் | | 1,054,270,986.14 | 943,574,193 |
| **பங்குரிமையும் பொறுப்புக்களும்** | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்குகள் | | | |
| மூலதன ஒதுக்கு | 17 | 380,421,185.24 | 307,575,084 |
| மீள் விலைமதிப்பு ஒதுக்குகள் | 18 | 307,170,027.56 | 307,170,028 |
| செலவிலும் கூடிய திரண்ட வருமானம் | | 307,683,544.60 | 261,223,489 |
| மொத்த பங்குரிமை | | 995,274,757.40 | 875,968,600 |
| நடைமுறை சாராத பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு | 19 | 37,858,775.50 | 29,593,685 |
| மருத்துவ நிதியம் | 20 | 238,678.90 | 241,490 |
| | | 38,097,454.40 | 29,835,175 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள் | 21 | 20,898,774.34 | 37,770,418 |
| மொத்த பங்குரிமையும் பொறுப்புக்களும் | | 1,054,270,986.14 | 943,574,193 |

இந் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 6 தொடக்கம் 21 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த நிதி நிலைமைக்

இந் நிதி நிலைமைக் கூற்றுக்களானவை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

......................

நிதித் தலைவர்

இந் நிதி நிலைமைக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பிற்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.

சபைக்காகவும் சபையின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது

| ..................... | .................. |
|---|---|
| தலைவர் | பணிப்பாளர் |

ஜா எல, கப்புவத்த

திகதி: 2017.06.26 ஆம் திகதி

# இலங்கை திரிபோஷ லிமிடட்
## பங்குரிமை மாற்றக் கூற்று
### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | குறிப்பு | மூலதன ஒதுக்குகள் ரூபா சதம் | மீள் விலைமதிப்பு ஒதுக்குகள் ரூபா சதம் | செலவிலும் கூடிய திரண்ட வருமானம் ரூபா சதம் | மொத்தம் ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| 2015.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | | 136,873,127.47 | 307,170,027.56 | 302,676,082.86 | **746,719,237.89** |
| சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனக் கொடை | 15 | 197,517,198.54 | | - | **197,517,198.54** |
| பெறுமானத் தேயவு - சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனச் சொத்துக் கொடை | 15 | (26,345,242.48) | - | - | **(26,345,242.48)** |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | 20 | (470,000.00) | - | 36,869.82 | **(433,130.18)** |
| 2015 செலவிலும் கூடிய வருமானம் | | - | - | (41,489,463.58) | **(41,489,463.58)** |
| 2015.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | | **307,575,083.53** | **307,170,027.56** | **261,223,489.10** | **875,968,600.19** |
| 2016.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | | 307,575,083.53 | 307,170,027.56 | 261,223,489.10 | **875,968,600.19** |
| சுகாதார அமைச்சிலிருந்து மூலதனக் கொடை | 17 | 102,406,369.70 | - | - | **102,406,369.70** |
| பெறுமானத் தேயவு - சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனச் சொத்துக் கொடை | 17 | (29,560,267.97) | - | - | **(29,560,267.97)** |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் - 2016 | 22 | | - | (23,575.77) | **(23,575.77)** |
| 2016 செலவிலும் கூடிய வருமானம் | | - | - | 46,483,631.27 | **46,483,631.27** |
| 2016.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | | **380,421,185.26** | **307,170,027.56** | **307,683,544.60** | **995,274,757.42** |

## இலங்கை திரிபோஷ லிமிடட்

## காசுப் பாய்ச்சற் கூற்று

### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2016.12.31 ரூபா | 2015.12.31 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஆண்டுக்கான செலவிலும் கூடிய வருமானம் | 46,483,631 | (36,313,714) |
| **சீராக்கங்கள்** | | |
| தேய்மானம் | 29,560,268 | 26,345,242 |
| ஆண்டுக்கான பணிக்கொடை ஏற்பாடு | 8,841,796 | 2,413,806 |
| மருத்துவப் பங்களிப்புக்கான ஏற்பாடு | 193,600 | 173,968 |
| முன்னைய ஆண்டு சீராக்கங்கள் | (23,576) | 36,870 |
| | 38,572,088 | 28,969,886 |
| தொழிற்படு மூலதனத்திற்கான மாற்றங்களின் முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | 85,055,719 | (7,343,828) |
| **தொழிற்படு மூலதனத்திலான மாற்றங்கள்** | | |
| கடன்படுனர் மற்றும் ஏனைய வருமதிகளிலான அதிகரிப்பு /(குறைவு) | 59,026,630 | (90,669,514) |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளிலான அதிகரிப்பு /(குறைவு) | (16,871,644) | (7,567,450) |
| இருப்புக்களில் அதிகரிப்பு /(குறைவு) | 22,165,039 | 57,025,533 |
| | 64,320,025 | (41,211,430) |
| பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு முன்னரான தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | 149,375,744 | (48,555,258) |
| கழிப்பனவு: | | |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (576,705) | (950,801) |
| மருத்துவ நன்மைக் கொடுப்பனவு | (196,411) | (73,642) |
| வரிக்குப் பின்னரான தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | 148,602,628 | (49,579,701) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்ளல் செய்தல் | (260,671,636) | (39,913,120) |
| திறைசேரி உண்டியல் மீளப்பெறல் | - | (30,000,000) |
| காசாக வட்டி பெறப்படல் | (2,389,439) | (51,456) |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | (263,061,075) | (69,964,576) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனக் கொடை | 72,846,102 | 166,005,984 |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | 72,846,102 | 166,005,984 |
| காசும் காசுக்குச் சமமான விடயங்களிலான மாற்றங்கள் | (41,612,345) | 46,461,707 |
| முன்கொண்டு வந்த காசும் காசுக்குச் சமமான விடயங்களும் | 53,922,992 | 7,461,286 |
| முன்கொண்டு சென்ற காசும் காசுக்குச் சமமான விடயங்களும் | 12,310,647 | 53,922,993 |
| **நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட்ட காசும் காசுக்குச் சமமான விடயங்களின் பகுப்பாய்வு** | | |
| இலங்கை வங்கி - ஜா எல 71324617 | 12,310,647 | 53,922,993 |
| | 12,310,647 | 53,922,993 |

# இலங்கை திரிபோஷ லிமிடட்
## உற்பத்திக் கணக்கு
### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | குறிப்பு | 31/12/2016 ரூபா சதம் | 31/12/2015 ரூபா |
|---|---|---|---|
| **உற்பத்திச் செலவு** | | | |
| **மூலப் பொருட்கள்** | | | |
| 2016.01.01 ஆம் திகதி மீதி | | 169,087,068.47 | 218,004,588 |
| கொள்வனவு | | 1,156,412,060.53 | 1,517,487,296 |
| | | 1,325,499,129.00 | 1,735,491,884 |
| 2016.12.31 ஆம் திகதி மீதி | | (151,509,362.88) | (169,087,068) |
| நுகர்வு மூலப்பொருட்களின் செலவு | | 1,173,989,766.12 | 1,566,404,816 |
| நேரடி உழைப்புச் செலவு | 08 | 139,817,126.63 | 132,557,414 |
| தொழிற்சாலை தலைக்குரிய செலவு | 09 | 74,295,302.39 | 90,556,367 |
| மீள் பொதியிடல் நட்டம் | | (199,118.65) | (3,213,954) |
| அடிப்படைச் செலவு | | 1,387,903,076.49 | 1,786,304,643 |
| **வேலை முன்னேற்றம்** | | | |
| 2016.01.01 ஆம் திகதி மீதி | | 9,025,425.56 | 14,567,809 |
| 2016.12.31 ஆம் திகதி மீதி | 13 | (8,215,483.81) | (9,025,426) |
| | | 809,941.75 | 5,542,384 |
| மொத்த உற்பத்திச் செலவு | | 1,388,713,018.24 | 1,791,847,026 |

## 1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1.1 அறிக்கையிடும் நிறுவனம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் முழுமையாக அரசுடமையான கம்பனி ஒன்றாக இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு தாபிக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இக் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தளமும் த.பெ. இல. 17, கப்புவத்தை, ஜா எல, இலங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

### 1.1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைத் தன்மை

சுகாதார அமைச்சின் “திரிபோஷ விநியோக நிகழ்ச்சித் திட்டம் சார்பில் “திரிபோஷ உற்பத்தி செய்யும் ஒரே கம்பனி இந்தக் கம்பனியாகும்.

இந்த கம்பனியின் ஏனைய பிரதான செயற்பாடுகள் பின்வருவனவாகும்:

- இலங்கையில் தாய், சேய் போசாக்கின்மையைக் குறைக்கும் பொருட்டு இலங்கையின் ஊட்டச்சத்துமிக்க குறைநிரப்பு உணவு உற்பத்தியான “திரிபோஷ வினது மேம்பாடு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு உதவுதல்.
- சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக திரிபோஷ உற்பத்திக்கான மூலப் பொருட்களை வழங்கும் உள்நாட்டு விவசாயிகளுக்கான வருமான பிறப்பாக்க வழியினை ஊக்கப்படுத்தல்.
- அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் வேறு ஏதேனும் வடிவத்திலான ஊட்டச்சத்துமிக்க கலக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கு நிலவும் சந்தை வாய்ப்பை குறைத்தல்.
- திரிபோஷவின் வருடாந்த தேவைப்பாட்டினை மதிப்பிடுதல் மற்றும் வழங்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கையினை எடுத்தல்.

### 1.1.3 பணிப்பாளர் சபை

1. திரு. எம்.டி. பந்துசேன (தலைவர்)
2. வைத்தியர் (திரு) பாலித குணரத்ன மஹீபால
3. வைத்தியர் (திருமதி) ஷாந்தி குணவர்த்தன
4. திருமதி எச்.எம். தேஜா ஹேரத்
5. திருமதி ஏ.ஆர். அஹமட்
6. வைத்தியர் தமயந்தி ஹப்புகொட
7. திரு பீ.பி. சிந்தக்க குலரத்ன
8. திரு எஸ்.ஆர். ராஜபக்ஷ (அவதானிப்பாளர்)

**சபைச் செயலாளர்**

திருமதி தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்

**1.1.4 கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்,
இல 306/72,பொல்தூவ வீதி, பத்தரமுல்லை.

**1.1.5 வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி, ஜா எல

**1.1.6 வெளியீட்டிற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி**

2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியின் நிதிக்கூற்றுக்களை பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கிணங்க வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டது.

**1.1.7 தயாரிப்பிற்கான அடிப்படை**

**(அ) ஒத்திசைவுக் கூற்று**

வருமானக் கூற்று, முழுமொத்த வருமான மற்றும் செலவினக் கூற்று, நிதி நிலமைக் கூற்று, உரிமை முதலிலான மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்று ஆகியவற்றினை உள்ளடக்கும் நிதிக் கூற்றுக்களானவை கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன் சேர்த்து (“நிதிக் கூற்றுக்கள்) இலங்கை பட்டயக் கணக்காளர் கம்பனியினால் வெளியிடப்பட்டவாறான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாட்டுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**(ஆ) அளவீட்டிற்கான அடிப்படை**

உரிய குறிப்புகளின் கீழ் உண்மைப் பெறுமதி குறித்து பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படும் இடங்கள் தவிர வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**(இ) ஒப்பீட்டுத் தகவல்கள்**

அளவு, எடுத்துரைப்பு மற்றும் விவரிப்பு சார்ந்த தகவல்கள் உள்ளடங்கலான ஒப்பீட்டுத் தகவல்களானவை, நிகழ்கால நிதிக் கூற்றுக்களின் புரிந்துகொள்ளலை முன்னேற்றும் பொருட்டும் இடைக்கால ஒப்பீட்டுத் தன்மையினை மேம்படுத்தும் பொருட்டும் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட சகல தொகைகளுக்குமான முன்னைய காலப்பகுதி தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கீழே விதித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளானவை, வேறு வகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலொழிய, இந் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட சகல காலப்பகுதிக்கும் ஒரே மாதிரியாகவே பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களின் முன்னளிப்பு அல்லது விடய உருப்படிகளின் வகைப்பாடானது திருத்தப்பட்டிருக்கும் பொழுது சிறந்த முன்னளிப்பினை வழங்கும் பொருட்டு நிகழ்கால ஆண்டுடன் ஒத்திசைவதற்கென ஒப்பீட்டுத் தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**(ஈ) நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்பும்**

இக் கம்பனியின் நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்புமாகவுள்ள இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்ட சகல நிதித் தகவல்களும், வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, கிட்டிய ஆயிரத்துக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

**(உ) அடிப்படை மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்வுகளைப் பயன்படுத்தல்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்வைப்பும் ஆனது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றைச் செய்வதற்கு முகாமையினைத் தேவைப்படுத்துகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட முடிவுகள் என்பற்றை விட வித்தியாசப்படக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் கீழுள்ள எடுகோள்கள் என்பன தொடர்ந்து செல்லும் ஓர் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்களானவை, அத் திருத்தமானது குறித்த காலப்பகுதியினை மாத்திரம் பாதித்தால் இம் மதிப்பீடானது திருத்தப்படும் காலப்பகுதியில் அல்லது திருத்தக் காலப்பகுதியிலும் அத்துடன் அத் திருத்தமானது நிகழ்காலப்பகுதியினையும் எதிர்காலப்பகுதியினையும் பாதித்தால் எதிர்காலத்திலும் இனங்காணப்பட்டுள்ளன.

**(ஊ) நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நிலமை**

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நடவடிக்கை என்ற ரீதியில் கம்பனியை தொடர்ந்தும் பேணுவதற்கு அதற்குள்ள ஆற்றல் தொடர்பில் பணிப்பாளர் சபை மதிப்பீடொன்றை செய்துள்ளது. தனது செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தேவையான அளவு வளங்கள் கம்பனியிடம் உள்ளதாக சபை திருப்தியடைந்துள்ளது. அதற்கிணங்க, கம்பனியை செயற்பாட்டு நிலமையில் பேணும் உத்தேசத்துடன் எதிர்காலத்தில் தொடர்ந்தும் பேணிவருவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## 1.2 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பு அடிப்படைகளும்

### 1.2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

**(அ) சொத்தினை இனங்காணல் மற்றும் அளவீடு செய்தல்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உருப்படிகளானவை திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் அல்லது உண்மைப் பெறுமதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய சகல உருப்படிகளும் ஆரம்பத்தில் திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த

கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. சொத்து ஒன்றின் முக்கியமான கூறுகளனைவை வெவ்வேறாக இனங்காணப்பட்டு தேய்விடப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் முக்கியமான பகுதிகளானவை கால இடைவெளிகளில் பதிலீடு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும் போது நிறுவனமானது பதிலீடு செய்யப்பட்ட பகுதியினை இனங்காணலிலிருந்து நீக்குவதுடன் புதிய

பகுதியினை அதன் சொந்த இணைந்த பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்வு ஆகியவற்றுடன் சேர்த்து இனங்காண்கின்றது. ஏனைய சகல திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகளும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

**(ஆ) கிரயம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கிரயமானது அதன் கொள்வனவு விலையினையும் மற்றும் அதன் உத்தேச பாவனைக்காக தொழிற்படு நிலையில் அச் சொத்தினைக் கொண்டுவருவதற்கு நேரடியாக விளைந்த ஏதேனும் கிரயத்தினையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் உழைக்கும் ஆற்றலைப் பேணுவதற்கு அல்லது அதிகரிப்பதற்கென நிரந்த அடிப்படையில் சொத்துக்களை கொள்ளல் செய்தல், விஸ்தரித்தல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக உறப்படும் அடுத்துவந்த செலவினமானது மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டுள்ளது.

பிரதான பரிசோதிப்பு மற்றும் பிரதான திருத்தச் செலவினம் உள்ளடங்கலாக, வெவ்வேறாக கணக்கிடப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றின் கூறு ஒன்றினை பதிலீடு செய்வதற்கு உறப்படும் செலவினமானது மூலதனமாகக் கருதப்படும். அடுத்துவந்த ஏனைய செலவினமானது, அப் பகுதிக்குள் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளானவை கம்பனிக்கு ஏற்படுவதுடன் அதன் கிரயமானது நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால் மாத்திரமே மூலதனமாகக் கருதப்படும்.

**(இ) தேய்வு**

அத்தகைய சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு பதிவழிக்கும் பொருட்டு வருடம் ஒன்றுக்கு பின்வரும் வீதங்களில் நேர்கோட்டு (□□□□□□□□ – □□□□ □□□□□) அடிப்படையில் மூலதன ஒதுக்கிற்கு தேய்வானது சாட்டுதல் செய்யப்படுகின்றது.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 20 வருடங்களுக்கு மேல் |
| பொறித்தொகுதியும் இயந்திர சாதனமும் | 20 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்களுக்கு மேல் |
| உபகரணம் மற்றும் கருவிகள் | 05 வருடங்களுக்கு மேல் |
| ஆய்வுகூட உபகரணம் | 05 வருடங்களுக்கு மேல் |
| விவசாய உபகரணம் | 10 வருடங்களுக்கு மேல் |
| மின்சார வேலைகள் | 05 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக உபகரணம் | 10 வருடங்களுக்கு மேல் |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்களுக்கு மேல் |
| அருவ சொத்துக்கள் | 04 வருடங்களுக்கு மேல் |

**(ஈ) இனங்கண்ட சொத்தினை நீக்குதல்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றானது, கையுதிர்ப்பின் பேரில் அல்லது அதன் பாவனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எவையும் எதிர்பார்க்கப்படாத போது, இனங்காணலிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்துக்களின் நீக்கம் தொடர்பான ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது, அச் சொத்தானது இனங்காணலிலிருந்து நீக்கப்படும் ஆண்டிலுள்ள விஸ்தீரண வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

### 1.2.2 நடைபெறும் வேலை

மூலதன நடைபெறும் வேலையானது கிரயத்தில் எடுத்துரைக்கப்படும். மூலதனமாக்கலினை எதிர்பார்த்து கட்டடங்களின் நிர்மாணிப்பில் நேரடியாக உறப்படும் மூலதன நோக்கம் ஒன்றினைக் கொண்ட செலவினங்களே இவையாகும். மூலதன நடைபெறும் வேலையானது, அது பாவனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் பொழுது, அதாவது கம்பனியினால் உத்தேசிக்கப்பட்ட விதத்தில் தொழிற்படும் ஆற்றலினை இது கொண்டிருப்பதற்கு தேவையான அமைவிடம் மற்றும் நிலையில் உள்ள போது, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உரிய சொத்து வகைக்கு மாற்றப்படும். மூலதன நடைபெறும் வேலையானது ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து, கடன்பெறும் செலவுகள் உள்ளடங்கலாக, கிரயத்தில் எடுத்துரைக்கப்படும்.

### 1.2.3 அருவச் சொத்துக்கள்

ஓர் அருவச் சொத்தானது, அச் சொத்தின் பண்பினைக் கொண்ட எதிர்கால பொருளாதார நன்மைகளானவை நிறுவனத்திற்கு ஏற்படுவதுடன் அச் சொத்தின் கிரயமானது இலங்கை கணக்கீட்டு நியமம் 38 – அருவச் சொத்துக்கள் என்பதற்கு இணங்க நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால், அது இனங்காணப்படும். அதற்கிணங்க, திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து கிரயத்தில் நிதி நிலமைக் கூற்றில் இச் சொத்துக்கள் எடுத்துரைக்கப்படும்.

கணனி மென்பொருளானது நேர்கோட்டு முறையில் 5 வருட காலப்பகுதி ஒன்றுக்கு கடனழிவு செய்யப்படுகின்றது.

கல்வித்திட்ட அபிவிருத்திக் கிரயமானது 5 வருட காலப்பகுதி ஒன்றுக்கு நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றது.

### 1.2.4 இருப்பு ஆவணங்கள்

காலங்கடந்த மற்றும் மெதுவாக விற்பனையாகி நகரும் பொருட்களை உரிய பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட பின்னர், சராசரிக் கிரயத்தில் இருப்புக்கள் விலைமதிக்கப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் இருப்புக்கள் விற்கப்படக்கூடிய விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

இருப்புக்களை அதன் தற்போதய அமைவிடத்திற்கும் நிலமைக்கும் கொண்டுவருவதில் உறப்பட்ட கிரயமானது பின்வரும் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது:-

| | | |
|---|---|---|
| மூலப் பொருட்கள் | - | கிரயத்தில் |
| முடிவுப் பொருட்கள் மற்றும் நடைபெறும் வேலை | - | நேர் மூலப் பொருட்கள், நேர்க் கூலி ஆகியவற்றின் கிரயத்தில் சாதாரண தொழிற்பாட்டின் அடிப்படையில் நிலையான உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதாசாரம் |
| இடமாறும் பொருட்கள் | - | உண்மைக் கிரயத்தில் |

மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

### 1.2.5 சொத்துக்களின் குறைவு

சொத்துக் குறைவு பற்றிய ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என்பதை வரையறுப்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின், அதன் பின்னர் சொத்துக்களை மீளப்பெறக்கூடிய தொகையானது மதிப்பிடப்படுகின்றது. சொத்து ஒன்றின் கொண்டு செல்லல் தொகை அல்லது காசினை உண்டுபண்ணும் அலகானது அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் பார்க்க அதிகரித்தால் குறைவுறு நட்டம் ஒன்று இனங்காணப்படும். மீளப்பெறக்கூடிய தொகையினை வரையறுப்பதற்கு பாவிக்கப்படும் மதிப்பீடுகளில் மாற்றமொன்று இருந்திருப்பின் குறைவுறு நட்டமானது நீக்கப்படும் (மறுதலையாக்கப்படும்).

### 1.2.6 நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இனது நோக்கெல்லைக்குள் நிதிச் சொத்துக்களானவை இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள், முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக அல்லது பொருத்தமுடையதாக, பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு ஒன்றில் பாதுகாப்பு ஆவணங்களாக குறித்தொதுக்கப்பட்டு பெறப்பட்டனவாக வகைப்படுத்தப்படும். கம்பனியானது ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது.

சகல நிதிச் சொத்துக்களும், சொத்துகள் என்னும் பட்சத்தில் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது, கொடுக்கல் வாங்கலுக்கு நேரடிக் காரணமாயிருந்த செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றது.

கடன்களும் வருமதிகளும் வைப்புக்களும் எத் திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே கம்பனியானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. ஏனைய

சகல நிதிச் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் குறித்தொதுக்கப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக), கம்பனியானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

நிதிச் சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முடிவடையும் போது அல்லது நிதிச் சொத்தின் உரிமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் சகலதும் மாற்றப்படும் கொடுக்கல் வாங்கல் ஒன்றிலுள்ள நிதிச் சொத்துத் தொடர்பான ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை கம்பனி மாற்றும் போது கம்பனியானது அச் சொத்தினை இனங்காணலிலிருந்து நீக்குகின்றது. கம்பனியினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்ட, மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களிலான ஏதேனும் வட்டியானது வேறானதோர் சொத்து அல்லது பொறுப்பாக இனங்காணப்படும்.

கம்பனியானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினை பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு

தேறிய தொகை நிதி நிலமைக் கூற்றில் முன்னளிக்கப்படும்.

கம்பனியின் நிதிச் சொத்துக்களானவை காசு மற்றும் குறுங்கால முதலீடுகள் அத்துடன் வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

### (அ) இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்கும் அல்லது மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக நிதிச் சொத்துக்கள் கொள்ளல் செய்யப்படுவதனால் வியாபாரத்திற்கு வைக்கப்படுவனவாக அவை வகைப்படுத்தப்படுகின்றன.

முழுமொத்த விரிவான வருமானக் கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவினத்தில் இனங்காணப்பட்ட உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களுடன் சேர்த்து உண்மைப் பெறுமதியிலான நிதி நிலமைக் கூற்றில் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் கொண்டுவரப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

### (ஆ) கடன்களும் வருமதிகளும்

செயலூக்கமிக்க சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது

வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களாக கடன்களும் வருமதிகளும் காணப்படும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அத்தகைய நிதிச் சொத்துக்கள் பின்னர் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பிலான ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கலினைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் 'நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் முழுமொத்த வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

வியாபார வருமதிகள், ஊழியர் கடன்கள், வைப்புக்கள், முற்பணங்கள், ஏனைய வருமதிகள் மற்றும் காசும் காசுக்குச் சமமான விடயங்களும் ஆகியவற்றை கடன்களும் வருமதிகளும் உள்ளடக்குகின்றன.

### (இ) முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிக் காலத்தையுடைய நிதிச் சொத்துக்கள் என்பன கம்பனியானது அவற்றை முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதற்கான சாதகமான உத்தேசம் மற்றும் ஆற்றலினைக் கொண்டுள்ள போது

முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துகள் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் 'நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் முழுமொத்த வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களிலான முதலீடுகளானவை முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்து முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### (ஈ) விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக குறித்தொதுக்கப்பட்ட அல்லது மேற்போந்த நிதிச் சொத்துக்களின் எந்தவிதமான வகுதிக்குள்ளும் வகைப்படுத்தப்படாத பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களே விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப இனங்காணலின் பின்னர், அவை உண்மைப் பெறுமதியில் அளவிடப்படும் அத்துடன் குறைவுறு நட்டங்களினை விட அதன்கண்ணுள்ள மாற்றங்களானவை ஏனைய முழுமொத்த வருமானத்தில் இனங்காணப்பட்டு நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் ஒதுக்கப்பட்ட உண்மைப் பெறுமதியில் முன்னளிக்கப்படும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான கடன் ஆவணங்கள் தொடர்பான வட்டி வருமானமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும். முதலீடு ஒன்றானது இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் திரளும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்படும்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான முதலீடாக ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

### 1.2.7.1 நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்

ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இக் கம்பனியானது மதிப்பிடுவதுடன் அத்தகைய குறைவானது நிகழ்ந்திருந்தால் அக் குறைவுறு தொகையானது சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையில் வேறுபாட்டினைக் கருத்திற்கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

### 1.2.8 காசும் காசுக்குச் சமமான விடயங்களும்

கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள வைப்புக்கள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமான விடயங்களும் உள்ளடக்குகின்றது.

"மறைமுக முறை யினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசுக்குச் சமமான விடயங்களினதும் ஒரு கூறாக வங்கி மேலதிகப்பற்று உள்ளடக்கப்படுகின்றது.

### 1.3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

கேள்வியின் பேரிலான கொடுப்பனவிற்கு அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் நிலுவையாகவுள்ளவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப்

பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புக்களாகும். அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறை சாராத (நிலையான) பொறுப்புக்களாகும்.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறிந்த சகல பொறுப்புக்களும் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கம்பனியானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் இனங்காணப்படுகின்றன அத்துடன் பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சலானது இக் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது.

### 1.3.1 ஊழியர் நலன்கள்

#### (அ) ஓய்வூதியப் பணிக்கொடை ஏற்பாடு

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு தகுதியுள்ள சகல ஊழியர்களுக்குமான நலன் திட்டம் இக் கம்பனியானது தொடர்ந்துள்ளது. இந்த நலன் திட்டமானது வெளியக ரீதியில் நிதியீட்டம் செய்யப்படுவதில்லை.

ஏற்பாட்டினை கணிப்பீடு செய்வதற்காக பாவிக்கப்படும் அடிப்படை எடுகோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

| | |
|---|---|
| கழிவிடப்பட்ட வீதம் | 12% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 10% |

| | |
|---|---|
| பணியாட்டொகுதிப் புறழ்வு | 02% |
| ஓய்வுபெறல் வயது | 55 வருடங்கள் |

தொடர்ந்து செல்லும் வர்த்தக கம்பனியாக இக் கம்பனியானது தொடரும்.

**(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்**

நிறுவனம் ஒன்றானது தனியான நிறுவனம் ஒன்றாக நிலையான பங்களிப்பினைச் செலுத்துவதும் அத்துடன் மேலதிக தொகை ஒன்றினைச் செலுத்துவதற்கான சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கொண்டிராததுமான தொழிலுக்குப் பின்னரான திட்டம் ஒன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்களுக்கான கடப்பாடுகளானவை, அவை நிலுவையிலுள்ள போது, முழுமொத்த வருமானக் கூற்றில் செலவு ஒன்றாக இனங்காணப்படும்.

**(இ) ஊழியர் சேமலாப நிதியம்**

அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் கம்பனியும் ஊழியர்களும் முறையே 12% இனையும் 08% இனையும் பங்களிப்புச் செய்கின்றனர்.

**(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

வரையறுக்கப்பட்ட □ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் 3% இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

**1.3.2 வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள்**

வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகளானவை கிரயத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது.

**1.3.3 வரி விதிப்பு**

பங்கிலாபங்கள் அல்லது வட்டி ஆகியவற்றிலிருந்தான மிகை மற்றும் வருமானத்தினை விட இக் கம்பனியின் மிகை மற்றும் வருமானம் ஆகியன 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 7 (□□□□) ஆம் பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

**1.3.4 பிற்போடப்பட்ட வரி**

2006 ஆம் ஆண்டின் 10 இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 7 (□□□□) ஆம் பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதனால் இக் கம்பனியின் மிகை மற்றும் வருமானமாக, பிற்போடப்பட்ட வரிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்**

நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளினால் அல்லது பொருளாதார நலன்களின் மாற்றமானது சாத்தியப்படக்கூடியதாகவில்லாத அல்லது நம்பகரமாக

மதிப்பிடப்படக்கூடியதாகவில்லாத நிகழ்கால கடப்பாடுகளின் மூலம் மாத்திரமே அவற்றின் இருப்பு உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகளாக எதிர்பாராத பொறுப்புக்கள் உள்ளன.

இக் கம்பனியின் மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களின் உரிய குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.4 விரிவான வருமானக் கூற்று

மூலதன ஒதுக்கு – (மூலதனக் கொடைகளுடன் தொடர்புபட்டவை)

சுகாதார அமைச்சு, கெயார் (□□□□) மற்றும் வரையறுக்கப்பட்ட சிலோன் புகையிலைக் கம்பனி ஆகியவற்றினால் வழங்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டிலிருந்து நிதிச் சொத்துக்கள் மீது செலவழிக்கப்படும் நிதியங்கள் மூலதனக் கொடைகளாக கருதப்பட்டுள்ளன ஆதலால் இவ் உருப்படிகள் மீதான பெறுமானத் தேய்வானது, அத் தேய்வினை ஆண்டுக்கான மொத்த தேய்வுக் கட்டணத்திற்கு எதிராக ஈடாக்கும் அதேவேளை உரிய மூலதன கொடைக் கணக்குகளில் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

### 1.4.1 மானியக் கொடை

அரசாங்க மானியக் கொடைகளானவை, அக் கொடையானது பெற்றுக்கொள்ளப்பட்டு அதனுடன் இணைந்த சகல நிபந்தனைகளும் இணங்கியொழுகப்படும் என்னும் நியாயமான உறுதிப்பாடு காணப்படுமிடத்து, இனங்காணப்படும்.

உறப்பட்ட செலவுகளுக்காக இக் கம்பனிக்கு இழப்பினை ஈடுசெய்யும் கொடைகளானவை, செலவுகள் இனங்காணப்படும் அதே காலப்பகுதியில் முழுமொத்த வருமானக் கூற்றில் வருமானமாக இனங்காணப்படும். சொத்து ஒன்றின் செலவுக்காக இக் கம்பனிக்கு இழப்பினை ஈடுசெய்யும் கொடைகளானவை நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்படும்.

### 1.4.2 செலவினம்

(அ.) உறப்படும் செலவுக்கும் குறித்த வருமான உருப்படிகளின் உழைப்புக்கும் இடையிலான நேரடி இணைப்பின் அடிப்படையில் முழுமொத்த வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படும். இக் கம்பனியினை நடாத்துதல் மற்றும் வினைத்திறனான நிலையில் மூலதனச் சொத்துக்களைப் பராமரித்தல் ஆகியவற்றில் உள்ளாகும் சகல செலவினங்களும் ஆண்டிற்கான மிகையினை அடையும் வருமானத்துக்கு எதிராகச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

### 1.4.3 நிதிச் செலவினம்/ வருமானம்

முதலீடு செய்யப்பட்ட நிதியங்களின் மீது அட்டுறு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியினை நிதி வருமானம் உள்ளடக்குகின்றது.

## 1.5 காசுப் பாய்ச்சல் கூற்று

கணக்கீட்டு நியமங்கள் 7 இற்கிணங்க காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1.6 அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னர் நிகழும் நிகழ்வுகளின் அடிப்படையான விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவசியமானவிடத்து, பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

**1.7 வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத நியமங்கள்**

கம்பனியின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் வெளியிடப்பட்ட திகதி வரையில், வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத நியமங்களானவை கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட நியமங்களினதும் பொருள்கோடல்களினதும் இப் பட்டியல்படுத்தலானது எதிர்காலத் திகதி ஒன்றில் பிரயோகிக்கப்படும் போது வெளிப்படுத்தல்கள், நிதி நிலமை அல்லது செயற்றிறன் மீதான தாக்கம் ஒன்றினை கம்பனி நியாயமாக எதிர்பார்ப்பதாகவே உள்ளது. இந் நியமங்கள் செயல்வலுவுக்கு வரும் போது அவற்றைப் பின்பற்றும் உத்தேசம் கம்பனிக்கு உள்ளது.

**(அ.) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 - நிதி ஆவணங்கள்:**

வகைப்படுத்தலும் அளவீடும் என்னும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 ஆனது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இனை பதிலீடாக்குவதுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இல் வரையறுக்கப்பட்டவாறு நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கு ஏற்புடையதாகின்றது. இந் நியமத்தின் கட்டாய செயல்வலுத் திகதியானது பிற்போடப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 இன் முதலாவது கட்டத்தினைப் பின்பற்றுதலானது கம்பனியின் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் விளைவு ஒன்றினைக் கொண்டிருக்கும் ஆனால் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் தாக்கம் எதனையும் சாத்தியமாகக் கொண்டிருக்காது. முழுமையானதோர் தோற்றப்பாட்டினை அளிக்கும் பொருட்டு ஏனைய கட்டங்களை வெளியிடும் போது அவற்றுடன் இணைந்த விளைவினைக் கம்பனியானது அளவிடும்.

**1.8 விற்பனைக்கான நடைமுறை சாராத சொத்துக்கள்**

தொடர்ந்து பாவிப்பதை விட முதற்படியாக கையுதிர்த்தல் ஒன்றுக்கூடாக மீளப்பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடைமுறை சாராத சொத்துக்களானவை விற்பனைக்கு வைத்திருக்கப் படுபவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்படுவதற்கு உடன் முன்னர், இச் சொத்துக்களானவை இக் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க மீள அளவிடப்பட்டுள்ளன. அதன் பின்னர், இச் சொத்துகளானவை அவற்றின் கொண்டு செல்லல் தொகை மற்றும் விற்பனைக்கான கிரயம் கழித்த உண்மைப் பெறுமதி ஆகியவற்றிலும் குறைவாக அளவிடப்படுகின்றன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுவதான ஆரம்ப வகைப்படுத்தல் மீதான சொத்துக் குறைவுறு நட்டங்கள் மற்றும் மீள் அளவீட்டின் பேரில் அடுத்துவரும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் என்பன இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளன. ஏதேனும் திரண்ட குறைவுறு நட்டத்தினை விடக் கூடுதலாக இலாபங்கள் இனங்காணப்படுவதில்லை.

## இலங்கை திரிபோஷ லிமிடட்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 31/12/2016 ரூபா சதம் | 31/12/2015 ரூபா |
|---|---|---|
| **02. வருமானம்** | | |
| சுகாதார அமைச்சின் மீளளிக்கப்பட்ட செலவுகள் | 1,467,564,568.46 | 1,776,421,903 |
| வருவாய் | 1,738,004.43 | - |
| | 1,469,302,572.89 | 1,776,421,903 |
| **03. நுகர்வுக்கு தயார் நிலையிலுள்ள உற்பத்திச் செலவு** | | |
| 2016.01.01 ஆம் திகதிக்கு நிறைவடைந்த உற்பத்திகள் | 38,202,137.04 | 39,550,478 |
| மொத்த உற்பத்திச் செலவு | 1,388,713,018.24 | 1,791,847,026 |
| 2016.12.31 ஆம் திகதிக்கு நிறைவடைந்த உற்பத்திகள் | (34,050,017.76) | (38,202,137) |
| | 1,392,865,137.52 | 1,793,195,367 |
| **04. ஏனைய வருமானம்** | | |
| வரையறையல்லா விற்பனை | 11,831,512.85 | 20,815,957 |
| வீட்டுக்கடன் வட்டி | 1,086,085.45 | 1,364,375 |
| திறைசேரி உண்டியல் மீதான வட்டி வருமானம் | 6,793,074.20 | 3,599,383 |
| | 19,710,672.50 | 25,779,714 |
| **05. விநியோகச் செலவுகள்** | | |
| போக்குவரத்துச் செலவுகள் | 6,929,064.13 | 11,119,781 |
| | 6,929,064.13 | 11,119,781 |
| **06. நிர்வாகச் செலவுகள்** | | |
| அடிப்படைச் சம்பளம் | 5,982,697.97 | 8,008,393 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,076,557.71 | 1,084,434 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 289,807.71 | 271,107 |
| மேலதிகநேரம் | 708,400.40 | 964,761 |
| கொடுப்பனவுகள் | 6,567,819.63 | 4,477,972 |
| பிரயாணச் செலவு | - | 3,971,580 |
| சட்ட மற்றும் தொழிற் கட்டணங்கள் | | 684,566 |
| ஊழியர் நலன்புரி | 2,151,417.37 | 1,521,857 |
| கட்டிடங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | 11,841,776.54 | 2,918,953 |
| தோட்டப் பராமரிப்பு | 70,635.00 | 70,305 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 729,127.71 | 862,566 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 584,150.59 | 222,156 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 7,034,082.85 | 6,932,193 |
| வாகன பழுதுபார்ப்பு | 2,154,767.81 | - |
| மோட்டார் வாகன எரிபொருள் | 120,424.90 | - |
| காகிதாதிகள் | 674,101.94 | 1,162,744 |
| அஞ்சல் செலவுகள் | 239,625.00 | 434,596 |
| மிகை செலவுகள் | 127,570.82 | 803,393 |
| அனுபத்திர மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் | 1,152,696.46 | - |
| ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 1,003,892.04 | 1,037,630 |
| ஊழியர் பயிற்சி | - | 344,400 |
| சுகாதார மற்றும் நலுத்துறை | - | 330,295 |
| | 42,509,552.45 | 36,103,901 |

## இலங்கை திரிபோஷ லிமிடட்
## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 31/12/2016<br>ரூபா சதம் | 31/12/2015<br>ரூபா |
|---|---|---|
| **07. நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| வங்கிக் கட்டணங்கள் | **26,741.37** | 58,077 |
| மீள் தயாரிப்புச் செலவு | **199,118.65** | 3,213,954 |
| | **225,860.02** | 3,272,031 |
| **08. நேரடி உழைப்பு மற்றும் முகாமைத்துவ செலவுகள்** | | |
| **தொழிற்சாலை சம்பளங்கள் மற்றும் வேதனம்** | | |
| அடிப்படைச் சம்பளம் | **35,923,672.45** | 59,093,740 |
| ஊழியர் சேமலாப நிதியம் | **6,534,397.58** | 7,006,976 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | **1,772,604.29** | 1,751,742 |
| மேலதிகநேரம் | **19,830,216.47** | 19,945,224 |
| விசேடகொடுப்பனவு | **43,774,460.50** | 25,402,271 |
| பணிக்கொடை | **8,841,795.50** | 2,413,806 |
| மாநாட்டு மற்றும் உபசரிப்பு செலவுகள் | **3,462,466.34** | 3,150,166 |
| மருத்துவ சேவை மீளளிப்பு | **102,786.66** | 742,153 |
| சேவைத் தள கொடுப்பனவு | **30,347.49** | - |
| ஊக்குவிப்பு கொடுப்பனவு | **6,004,187.00** | 6,002,713 |
| சம்பளம் மற்றும் வேதனம் | **3,035,168.15** | 2,060,041 |
| ஏனைய ஒப்பந்தங்கள் | **6,707,893.78** | 835,939 |
| சீருடைகள் மற்றும் சலவை | **3,797,130.42** | 4,152,642 |
| | **139,817,126.63** | 132,557,414 |
| **09. தொழிற்சாலை பொதுச் செலவுகள்** | | |
| மினசொர கொதிகலன் மற்றும் மின் பிறப்பாக்கி | **51,081,727.80** | 58,598,387 |
| தொழிற்சாலை பராமரிப்புக் கட்டணம் | **2,001,871.96** | 1,821,128 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் பராமரிப்பு | **17,772,373.55** | 24,184,401 |
| வேறு சேவைகள் | **1,662,564.71** | 2,663,747 |
| வரிப்பணம் மற்றும் வரி | **445,036.47** | 486,969 |
| மாதிரிப் பரிசோதனை | **792,803.90** | 1,498,088 |
| பீடைக் கட்டுப்பாடு | **538,924.00** | 970,412 |
| தொலைபேசி | **-** | 333,234 |
| | **74,295,302.39** | 90,556,367 |

10. ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம்

| செலவு / பெறுமதி | 2016.01.01 ஆம் திகதி மீதி | சேர்ப்பு | மாற்றீடு | 2016.12.31 ஆம் திகதி மீதி |
|---|---|---|---|---|
| காணி | 220,000,000.00 | - | - | **220,000,000.00** |
| கட்டடம் | 76,764,082.06 | 33,422,843.80 | - | **110,186,925.86** |
| பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும் | 157,822,457.20 | 218,900,546.35 | - | **376,723,003.55** |
| மோட்டார் வாகனம் | 22,208,750.00 | - | - | **22,208,750.00** |
| உபகரணங்களும் கருவிகளும் | 11,929,912.97 | 1,696,411.56 | - | **13,626,324.53** |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 5,702,187.50 | 280,224.50 | - | **5,982,412.00** |
| கமத்தொழில் உபகரணங்கள் | 138,650.00 | - | - | **138,650.00** |
| மின்சார வேலைகள் | 2,448,650.81 | 3,710,383.95 | - | **6,159,034.76** |
| அலுவலக உபகரணங்கள் | 12,304,126.62 | 2,234,509.47 | - | **14,538,636.09** |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 4,334,851.29 | 426,716.38 | - | **4,761,567.67** |
| | 513,653,668.45 | 260,671,636.01 | - | **774,325,304.46** |

| திரண்ட பெறுமானத் தேய்வு | 2016.01.01 ஆம் திகதி மீதி | வருடத்திற்கான அறவீடு | மாற்றீடு | 2016.12.31 ஆம் திகதி மீதி |
|---|---|---|---|---|
| கட்டடம் | 11,614,074.97 | 3,838,204.10 | - | **15,452,279.07** |
| பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும் | 44,369,164.15 | 15,785,871.72 | - | **60,155,035.87** |
| மோட்டார் வாகனம் | 7,838,042.17 | 4,441,750.00 | - | **12,279,792.17** |
| உபகரணங்களும் கருவிகளும் | 6,976,002.26 | 2,499,427.82 | - | **9,475,430.08** |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 1,624,971.19 | 584,742.01 | - | **2,209,713.20** |
| கமத்தொழில் உபகரணங்கள் | 43,905.83 | 13,865.00 | - | **57,770.83** |
| மின்சார வேலைகள் | 1,049,925.29 | 520,890.92 | - | **1,570,816.21** |
| அலுவலக உபகரணங்கள் | 3,047,942.67 | 1,264,878.21 | - | **4,312,820.88** |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 1,171,605.63 | 445,341.30 | - | **1,616,946.93** |
| | 77,735,634.16 | 29,394,971.08 | - | **107,130,605.24** |

| பதிவழிப்பு பெறுமதி | 2016.12.31 ஆம் திகதி மீதி ரூபா சதம் | 2015.12.31 ஆம் திகதி மீதி ரூபா |
|---|---|---|
| காணி | **220,000,000.00** | 220,000,000 |
| கட்டடம் | **94,734,646.79** | 65,150,007 |
| பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும் | **316,567,967.68** | 113,453,293 |
| மோட்டார் வாகனம் | **9,928,957.83** | 14,370,708 |
| உபகரணங்களும் கருவிகளும் | **4,150,894.45** | 4,953,911 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | **3,772,698.80** | 4,077,216 |
| கமத்தொழில் உபகரணங்கள் | **80,879.17** | 94,744 |
| மின்சார வேலைகள் | **4,588,218.55** | 1,398,726 |
| அலுவலக உபகரணங்கள் | **10,225,815.21** | 9,256,184 |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | **3,144,620.74** | 3,163,246 |
| | **667,194,699.22** | 435,918,034 |

## இலங்கை திரிபோஷ லிமிடட்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

### 11. தொட்டுணர முடியாத சொத்துக்கள்

| | 2016.12.31 ஆம் திகதி மீதி ரூபா சதம் | 2015.12.31 ஆம் திகதி மீதி ரூபா |
|---|---|---|
| செலவு | 661,187.57 | 661,188 |
| திரண்ட தேய்மானம் | (165,296.89) | - |
| பதிவழிப்பு பெறுமதி | 495,890.68 | 661,188 |

### 12. முதலீடுகள்

| | | |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் - முகப்பெறுமதி | 92,359,000.00 | 90,000,000 |
| திறைசேரி உண்டியல்கள் - கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் | 282,169.64 | 251,731 |
| | 92,641,169.64 | 90,251,731 |

## இலங்கை திரிபோஷ லிமிடட்
## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
### 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| 13 இருப்பு பொருட்கள் | 31/12/2016 | 31/12/2015 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா |
| மூலப்பொருள் | | |
| கோதுமை | 18,732,378.06 | 8,632,731 |
| சோயா | 93,212,872.80 | 91,069,823 |
| கனியங்கள் | 114,540.00 | 2,545,452 |
| விட்டமின்கள் | 2,549,808.75 | 3,684,368 |
| பால்மா | 31,833,000.00 | 55,451,250 |
| | 146,442,599.61 | 161,383,623 |
| பொதியிடல் மூலப்பொருட்கள் | | |
| பொலித்தீன் பைகள் | 2,890,755.00 | 4,081,248 |
| பல படுகை சவ்வு | 1,029,346.95 | 3,237,161 |
| கிராப்ட் கடதாசி பைகள் | 934,950.00 | 385,037 |
| டுவைன் நூல் | 211,711.32 | - |
| | 5,066,763.27 | 7,703,445 |
| வேறு | | |
| டீசல் | 2,248,175.00 | 1,586,975 |
| பொறியியல் களஞ்சியம் | 10,085,039.15 | 10,371,512 |
| | 12,333,214.15 | 11,958,487 |
| செய்து கொண்டிருக்கும் வேலைகள் | | |
| மூலப் பொருட்கள் | | |
| கோதுமை | 5,259,870.00 | 4,402,760 |
| சோயா | 1,533,410.00 | 3,023,085 |
| கனியங்கள் | 186,127.50 | 48,951 |
| பால்மா | 627,750.00 | 465,000 |
| விட்டமின் | 96,479.25 | 51,893 |
| பொதியிடல் மூலப்பொருட்கள் | | |
| பொலித்தீன் பைகள் | 171,085.50 | 179,387 |
| பல படுகை சவ்வு | 263,231.32 | 792,895 |
| கிராப்ட் கடதாசி பைகள் | 72,302.80 | 61,455 |
| டுவைன் நூல் | 5,227.44 | - |
| | 8,215,483.81 | 9,025,426 |
| முடிவுப் பொருட்கள் | | |
| தாய் | 11,936,657.70 | 13,206,554 |
| சேய் | 22,113,360.06 | 24,995,583 |
| | 34,050,017.76 | 38,202,137 |
| மொத்தம் | 206,108,078.60 | 228,273,118 |

| | 31/12/2016<br>ரூபா சதம் | 31/12/2015<br>ரூபா |
|---|---|---|
| **14 வர்த்தகம் மற்றும் ஏனைய வரவேண்டியவைகள்** | | |
| கடனாளிகள் | 50,945,138.11 | 1,627,719 |
| வீட்டுக்கடன் - ஆதனக்கடன் | 10,848,129.62 | 17,877,066 |
| வீட்டுக்கடன் - இடர் கடன் | 9,403,574.67 | 10,972,102 |
| சுற்றுலா முற்பணம் | 147,500.00 | 233,000 |
| நாநாவித வைப்புக்கள் மற்றும் முன் கொடுப்பனவுகள் | 3,087,658.20 | 102,748,743 |
| வைப்புக்கள் | 101,000.00 | 101,000 |
| மீளளிக்கப்படும் வைப்புகள் | 987,500.00 | 987,500 |
| | 75,520,500.60 | 134,547,131 |
| **15 பணமும் பணத்திற்கு சமமானவையும்** | | |
| இலங்கை வங்கி - ஜா-எல 71324617 | 12,310,647.40 | 53,922,992 |
| | 12,310,647.40 | 53,922,992 |

**16 வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்**

2010-06-23 ஆம் திகதியன்று அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திரிபோசா கம்பனியின் முகாமைத்துவம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட முழுமையாக அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக 304,600,000/- ரூபாவைக் கொண்ட வெளிப்படுத்தப்பட்ட மூலதனத்துடன் 2010 செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது தாபிக்கப்பட்டது.

| | 31/12/2016 | 31/12/2015 |
|---|---|---|
| **17 மூலதன ஒதுக்கங்கள்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | 307,575,083.51 | 136,873,127 |
| சுகாதார அமைச்சின் மூலதன நன்கொடை | 102,406,369.70 | 39,251,932 |
| மூலதன சொத்துக்கள் மற்றும் சுகாதார அமைச்சின் மூலதன முற்பணம் | - | 158,265,266 |
| நிலையான சொத்துக்கள் அகற்றல் | - | |
| செலவுகள் | | (470,000) |
| கழககுக: ஆண்டிறகான பெறுமானத்தேய்வு கட்டணம் | (29,560,267.97) | (26,345,242) |
| ஆண்டிறுதியில் மீதி | 380,421,185.24 | 307,575,084 |
| **18 ஒதுக்கங்களின் மீள் பெறுமதியிடல்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | 307,170,027.56 | 307,170,028 |
| ஆண்டில் மீள் பெறுமதியிடல் | - | - |
| ஆண்டிறுதியில் மீதி | 307,170,027.56 | 307,170,028 |
| **19 ஓய்வூதிய நலன்கள்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | 29,593,685.00 | 28,130,680 |
| கழிக்குக: ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | (576,705.00) | (977,538) |
| ஆண்டிற்கான நிதி ஏற்பாடு | 8,841,795.50 | 2,440,543 |
| ஆண்டிறுதியில் மீதி | 37,858,775.50 | 29,593,685 |

| | | |
|---|---|---|
| கழிவு வீதம் | 12% | 12% |
| எதிர்கால சம்பளவேற்ற வீதம் | 10% | 10% |
| பதவியணி சுழற்சி | 2% | 2% |
| ஓய்வுபெறும் வயது | 55 வருடம் | 55 வருடம் |

| | 31/12/2016 ரூபா சதம் | 31/12/2015 ரூபா |
|---|---|---|
| **20 மருத்துவ நிதியம்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | **241,489.96** | 141,164 |
| ஆண்டில் பங்களிப்பு | **193,600.00** | 173,968 |
| ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவு | **(196,411.06)** | (73,642) |
| ஆண்டிறுதியில் மீதி | **238,678.90** | 241,490 |

| | | |
|---|---|---|
| **21 வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்** | | |
| கடன் தருநர் | **20,573,379.34** | 37,381,448 |
| உற்சவ முற்பணம் | **36,250.00** | - |
| மீளளிக்கப்படும் வைப்புகள் | **179,337.50** | 179,338 |
| கணக்காய்வாளர் ஊதிய கொடுப்பனவு | **109,807.50** | 209,633 |
| | **20,898,774.34** | 37,770,418 |

| | | |
|---|---|---|
| **22 முன்னைய ஆண்டு செம்மையாக்கல்** | | |
| செலுத்த வேண்டிய கணக்குகளுக்கான செம்மையாக்கல் | - | 36,870 |
| செலவுக் கணக்குகளுக்கான செம்மையாக்கல் | 23,576 | - |
| 2014 ஆம் ஆண்டில் இயந்திரங்கள் அகற்றல் மீதான நட்டம் | - | (470,000) |
| | 23,575.77 | (433,130) |

**23 மூலதன கொடை சம்பந்தமான பெறுமானத்தேய்வு.**

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் சம்பந்தமான பெறுமானத்தேய்வு, இந்த ஆண்டின் மொத்த பெறுமானத்தேய்வுக் கட்டணத்தை குறைத்துக் கொண்டு உரிய மூலதனக் கொடை கணக்கிற்கு அறவிடப்பட்டுள்ளது.

**24 பொறுப்புகளும் எதிர்பார்க்கப்படாதவைகளும்**

அறிக்கையிடப்பட்ட திகதியில் எவ்வித வெளித்தெறியும் பொறுப்புகளோ அல்லது எகிர்பார்க்காக ிகம்வகளோ ிடைபெறவில்லை.

**25 தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள்**

**முக்கிய பதவியணி உறுப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்**

கம்பனியின் முக்கிய பதவியணி உறுப்பினர்களாவது, அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகும்.

මගේ අංකය / எனது இல. / My No. எச்எஸ்எம்/எவ்/எஸ்எல்ரீசி/06/16/12 | මබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2017 ஆகஸ்ட் 18

தலைவர்,

வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோசா கம்பனி

**வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோசா கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோசா கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கம்பனியின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 கம்பனியின் தாபிப்பு**

---

1987 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை புகையிலை கம்பனியின் கீழ் இருந்த திரிபோசா செயற்திட்டம் 2010 யூன் 23 ஆந் திகதிய 10/1236/415/039 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 2010 செப்தெம்பர் 14 இல் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் அரசிற்குரிய முழுமையான உரிமை மூலதனத்துடன் வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோசா கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் சபை பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோசா கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02

இருப்புக்களின் கிரயம் அல்லது தேறிய நிகரத்தக்க பெறுமதியில் எது குறைந்ததோ அதில் கணிப்பிடப்பட வேண்டிய போதிலும், திரிபோசாவின் முடிவடைந்த இருப்புக்கள் சராசரிக் கிரயத்தில் கணிப்பிடப்பட்டிருந்தது. மேலும், முடிவடையாத இறுதி இருப்புக்களின் பெறுமதி நேரடி மூலப்பொருள் கிரயம், நேரடி ஊழியக் கிரயம் மற்றும் நேரடி நிலையான மேந்தலைக் கிரயம் என்பவற்றை உள்ளடக்கி கணிப்பிடவேண்டும். இருந்தபோதிலும், முடிவடையாத இருப்புகளின் பெறுமதி நேரடி மூலப்பொருள் கிரயத்தை மாத்திரம் உள்ளடக்கி கணிப்பிட வேண்டும். இருந்தபோதிலும், முடிவடையாத இருப்புகளின் பெறுமதி நேரடி மூலப்பொருள் கிரயத்தை மாத்திரம் உள்ளடக்கலின் மூலம் ரூபா 8,215,484 ஆக கணிப்பிடப்பட்டிருந்தமையால் அதனால், ஆண்டின் உற்பத்திக் கிரயம் அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

கம்பனியால் செலுத்தப்பட்ட பணிக்கொடை ஓய்வூதிய நன்மை உள்ளபடியான மதிப்பீட்டாளரின் (Acturial Valuator) அறிவுறுத்தல்களின் பேரில் செயற்திட்ட பிரிவு கடன் முறைமையின் (Projected Unit Credit Method) பிரகாரம் நடைமுறைப் பெறுமதியில் கணிப்பிட வேண்டும். இருந்தபோதிலும், கம்பனியானது அந்த தேவைப்பாடுகளுக்கு முரணாக பணிக்கொடை ஓய்வூதிய நன்மைகளை கணித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது ரூபா 37,858,775 ஆகவிருந்தது. மேலும், கணக்கீட்டு கொள்கையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

அரசாங்க மானியானது சொத்தொன்றாக நீண்டகால பொறுப்புகளின் கீழ் பிற்போடப்பட்ட வருமானமாக (Deterred Income) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். அல்லது சுவீகரிக்கப்பட்ட சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியை (Carrying Amount) கழித்து குறிப்பிட்டு காட்டவேண்டும். மானியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் உரிய பெறுமானத் தேய்வுகளை சீராக்கஞ் செய்வதற்கு பதிலாக, இதனுடைய பெறுமதியானது முன்னைய ஆண்டுகளில் கம்பனியால் தீர்மானித்து பெறமுடிந்திருக்காததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 106,019,410 மானியங்கள் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக வருமான மற்றும் செலவின கணக்கிற்கு பெறப்பட்டதுடன் பிற்போடப்பட்ட வருமானமாக காலக்கழிவு செய்யப்பட்டிருந்தது. இது மூலதன மானியங்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. மேலும், மானியங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் அகவிதியின் 6 ஆம் உபபிரிவின் பிரகாரம், கம்பனியின் மொத்த பங்கு மூலதனம் அரசாங்கத்தின் சார்பில் பொதுத்திறைசேரியின் செயலாளரால் வைத்திருக்கப்பட வேண்டியதுடன் அதன் உப பிரிவு 7 இன் பிரகாரம், அது கம்பனியின் பங்கு மூலதனம் ரூபா 304.6 மில்லியனாக இருந்தது என குறிப்பிடப்பட்டிருந்த அதேநேரம், அத்தகைய மூலதன உரிமையாண்மை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 1,509 கிலோகிராம்கள் சோயா அவரை சேதமாக்கப்பட்டிருந்ததுடன், இருப்பு புத்தகங்களிலிருந்து இது மீளப்பெறப்பட்டிருந்தது. இருந்த போதிலும், அழிவடைந்த இருப்பு பெறுமதியை மதிப்பிடுவதற்கும் அவற்றை கணக்குகளிலிருந்து இல்லாமல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பாக பராமரிக்கப்பட்ட வாக்குப்பண பேரேட்டில் அந்த பெயர் மற்றும் பெறுமதிகள் மற்றும் வாக்குபண பேரேட்டின் பொழிப்பு மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பேணப்பட்ட பேரேட்டு கணக்குகளின் பெயர்கள் மற்றும் பெறுமதிகள் ஒவ்வொன்றுடன் சமப்பட்டிருக்காத 15 சந்தர்ப்பங்கள் இருந்ததுடன் அதில், பேரேட்டுக் கணக்கின் பெறுமதி 8 சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் 07 சந்தர்பபங்களுடன் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகளின் பெறுமதி ரூபா 2,483,465 ஆகவிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதமாகவுள்ள மூலப்பொருட்களின், முடிவடைந்த மற்றும் முடிவடையாத இருப்புக் கணிப்பீடு செய்முறைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அழைக்கப்பட்டிருக்காததுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநியாளர்கள் இந்த செய்முறையில் பங்குபற்றியிருக்கவில்லை. அதற்கிணங்க கணக்காய்வு நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அத்திகதியில் மீதமாகவுள்ள ரூபா 206,668,618 கிரயமான மதிப்பீடு மீது அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்த சாத்தியமற்றிருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு அறிக்கையிட்டவாறு, கம்பனியின் மூன்று உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு சுற்றுலாக்களில் பங்குபற்றியிருந்ததுடன் அதற்காக ரூபா 1,224,119 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், வெளிநாட்டு சுற்றுலாக்களுடன் தொடர்புடைய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் அதனால், மேற்கூறப்பட்ட சுற்றுலாக்கள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குகின்றதா மற்றும் சுற்றுலாக்களின் நோக்கங்கள் அடையப்பட்டிருந்ததா என்று அபிப்பிரயாயத்தை வழங்குவதற்கு சாத்தியமற்றிருந்தது.

(இ) ரூபா 1,193,313,232 தொகையான அத்தகைய சீராக்கங்கள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள், துணை ஆவணங்களை தயாரிப்பதன் மூலம் நாளேட்டு கணக்குளை தயாரிக்காமல் சீராக்கப்பட்ட பேரேட்டு உறுதிச்சீட்டுக்கள், கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

---

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்களிற்கான பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 139(6) | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம், காசோலையில் காண்பிக்கப்பட்ட கொடுப்பனவு செய்பவரின் பெயர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் உறுதிச்சீட்டின் முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் இணங்கியிருக்கும் வகையில் தயாரிக்க வேண்டும். இருந்தபோதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 30,000 தொகையான கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட 02 காசோலைகள் தொடர்புடைய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்ட பெயருக்கு பதிலாக, காசோலைகள் மற்றும் காசுப்புத்தகங்களின் மறுபகுதியில் |

| | | |
|---|---|---|
| | | வேறுபெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 751 | பெறப்பட்ட பொருட்கள் அனைத்தும் உடனடியாக இருப்புக்களில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க இருப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | பொருள் மெய்மையாய்வு, ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்பட வேண்டியபோதும் மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 | பிணைகளை சமர்ப்பிக்கப்பட வேண்டிய உதவி உத்தியோகத்தர்கள் குறித்த காலப்பகுதியினுள் உரிய பிணையை சமர்ப்பித்தார்களா என கம்பனியின் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும். இருந்த போதிலும், பொது அலுவலர்கள் (பாதுகாப்பு) கட்டளைச்சட்டத்தின் பிரகாரம், பிணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 06 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647 | கம்பனிக்கு சொந்தமான ரூபா 22,208,750 கிரயமான 07 மோட்டார் வாகனங்கள் இருந்த போதிலும், பட்டியலிடப்பட்ட வாகன பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 3.8 ஆம் பந்தி | இயக்குனர் சபையின் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்காக உரிய அலுவலகங்களிற்கு அறிவிப்பதற்கு பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 4.3 ஆம் பந்தி | இயக்குனர் சபை கூட்டங்களின் குறிப்புகள் அடுத்த கூட்ட திகதி உறுதிப்படுத்திய பின்னர் 10 நாட்களுக்குள் உரிய அமைச்சரின் செயலாளருக்கு சமர்ப்பிக்கவேண்டிய போதும், அதற்கிணங்க நடவடிக்கை இருந்ததென்பதற்கான எழுத்துமூல சான்று இருக்கவில்லை. |
| (iii) | 9.2 (ஈ) ஆம் பந்தி | கம்பனியின் அமைப்பு வரைபடம் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடி/2015 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், 170 லீற்றர் எரிபொருளிற்கு சமனாக எரிபொருள் படியை வழங்குவதற்கு பதிலாக ரூபா 419,447 பெறுமதியான 3,277 லீற்றர் எரிபொருள் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிஞ்சி 2015 நவம்பர் இலிருந்து 2017 மார்ச் வரை அலுவலக வாகனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 41,489,464 வருமானத்தை மிஞ்சிய செலவினத்திற்கு எதிராக ரூபா 46,483,631 செலவினத்தை விஞ்சிய வருமானத்தை விளைவித்திருந்தது. ஆகையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 87,973,095 வருமானத்தை மிஞ்சிய செலவினத்தில் முன்னேற்றத்தை சுட்டிக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்காக

செலவினத்தின் மீளளிப்பதற்காக பெறுவனவுகளிலிருந்து உற்பத்தி கிரயத்தை கழித்த பின்னர் ரூபா 93,210,899 ஆல் பங்களிப்பு அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் மேற்குறிப்பிடப்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

கம்பனியின் அகவிதிகள் பிரகாரம், தாய்மார்கள் மற்றும் சிறுவர்களின் போசாக்கின்மையைக் குறைப்பதற்காக இலங்கையில் பயன்படுத்தப்படும் மேலதிக போசாக்கு மூலகமாக திரிபோசா உற்பத்தி செய்தல், விநியோகித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்களை மேம்படுத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்துதல், திரிபோசா உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தும் வழிகளுக்காக அவர்களை ஊக்குவித்தல், அரசாங்க கொள்கைகளுக்கு இணங்கிய ஏனைய போசாக்கு மூலகங்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல், வருடாந்தம் தேவைப்படும் உள்நாட்டு திரிபோசாவின் அளவு பற்றிய மதிப்பீடு செய்து அத் தேவையினை வழங்குவதற்காக பொறுப்புத்தனமான நடவடிக்கைகள் எடுத்தல் என்பன கம்பனியின் முக்கிய குறிக்கோள்களாகும்.

புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட பொறிகள் மற்றும் இயந்திரங்களின் தாபிப்பிற்காக ஒரு மாத காலப்பகுதிக்காக தொழிற்சாலை மூடப்பட்டமை, இயந்திரங்களை செயற்படுத்துவதற்கு தேவையான ஊழியர்களை நிரப்ப தவறியமை, புதிய பொதியிடல் இயந்திரங்களை காலநேரத்தில் பெற தவறியமை, இரண்டு மாத காலப்பகுதியில் குறைவான பொருட்களின் உற்பத்தி செய்முறை மேற்கொள்ளப்படாமை போன்ற காரணங்களால் மீளாய்வாண்டிற்காக உற்பத்தி பொறியுடன் ஒப்பிடும் போது 47 சதவீதத்திற்கு சமனான 379,430 பிரதான பைகளின் உற்பத்தி இலக்கை அடைய முடியாதிருந்தது.

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்வாக விதிகளின் குறியீடு கம்பனியின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அரச முயற்சிகள் திணைக்களம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அதற்காக அறிக்கை திகதியளவிலும் அங்கீகாரத்தை பெற்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் நிர்வாகப் பிரிவின் உத்தியோகத்தர்கள் தொடர்பில் கடமை பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு நிரப்பப்பட்டிருந்த போதிலும், அத்தகைய கடமை பட்டியல்கள் எழுத்து மூலத்தில் அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கடமைப் பட்டியல்கள் கணக்கு பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த அதேநேரம் அவர்களால் செயற்படுத்தப்படுகின்ற கடமைகளை உள்ளடக்குவதற்கான கடமை பட்டியல்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனி அமைந்துள்ள காணிக்கான சட்டரீதியான உறுதி இல்லாதிருந்ததுடன் நம்பிக்கையான உறுதியை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் அத்தகைய உறுதியை தயாரிப்பதற்கு சாத்தியமற்றிருந்தது.

(ஈ) சோயா அவரைகள் மற்றும் சோளத்திற்காக பராமரிக்கப்பட்ட மூலப்பொருள் களஞ்சியங்களின் பூச்சிகளால் ஏற்பட்ட சேதங்களை தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும், களஞ்சியங்களின் மேற்பகுதியிலுள்ள கருவிகளில் சில திறந்த நிலையிலிருந்த அதே நேரம் விலையின் பகுதியொன்று களஞ்சியங்களின் கருவிகளை சுற்றியுள்ள திறந்த நிலையிலிருந்ததுடன் களஞ்சியங்களில் புறாக்களை கண்டுபிடிக்க முடிந்திருந்தது.

(உ) சோயா அவரையின் 98 கிலோகிராம்களினதும் சோளத்தின் 857 கிலோகிராம்களினதும் உள்ளபடியான பெறுமதி இணங்காணப்பட்டிருக்காததுடன் அதன் மொத்த பெறுமதி ரூபா 62,470 தொகையானதுடன் எலி கடித்தமை மற்றும் பியூமிகேசனால் அழிவடைந்தமை 2017 மார்ச் 15 அளவில் உற்பத்திக்காக பொருத்தமான சோயா அவரைகள் மற்றும் சோளங்களுடன் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. சேதமடைந்த இருப்பை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெறுவதன் மூலம் அழிப்பதற்கும் அதனை புத்தகங்களிலிருந்து இல்லாமல் செய்வதற்கும் அதற்கான பெறுமதியினை கணக்குகளிலிருந்தும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நியமங்களின் பிரகாரம், களஞ்சியங்களை பேணாமை மற்றும் உரிய நட்டத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் மீது முறையான விசாரணையை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம், சேவையிலிருந்து விலகிய பணிக்கொடைக்கு தகைமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடையானது அவர்கள் சேவைகளிலிருந்து விலகியதிலிருந்து 30

நாட்களுக்குள் செலுத்தப்படவேண்டும். இருந்தபோதிலும், 2016 யூலை 15 இல் மற்றும் 2016 நவம்பர் 21 இல் ஓய்வு பெற்ற இரண்டு உத்தியோகத்தர்கள் அறிக்கைத் திகதி வரையிலும் அவர்களின் ஓய்வூதிய பணிக்கொடையை செலுத்தியிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பேருவல வாக்காளர் தொகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட புத்தாண்டு விழா போட்டிகளுக்கான பரிசுப்பொருட்களை வழங்குவதற்கு முன்மொழியப்பட்ட கொள்வனவு பொருட்கள் தொடர்பில் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 50,000 பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டிருந்த போதும், புத்தாண்டு விழாவை கொண்டாடப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு எந்தவித கணக்காய்வு சான்றும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. மேலும், கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பிரகாரம், காசோலை வழங்கப்பட்ட நிறுவனமானது அத்தகைய பொருட்களின் விற்பனையில் ஈடுபட்டிருக்காத நிறுவனமொன்றாகவிருந்ததுடன் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளின் பெயர் மற்றும் காசோலைகளின் மறுபகுதி மற்றும் காசுப்புத்தகங்களின் உறுதிப்படுத்தல்கள் ஒவ்வொன்றுடன் வேறுபட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரிபோசா கம்பனியின் களஞ்சியங்களின் மேல் கட்டிடத்தின் இன் 900 சதுர அடியிலான பரப்பு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், அங்கு பயன்படுத்தியிருக்காத ரூபா 25,480 பெறுமதியான 13 பொதியிடல் மேசைகள், 04 கதிரைகள் மற்றும் 13 மேசைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,192,286 புத்தகப் பெறுமதியுடைய 203 சொத்து உருப்படிகள், பல வருடங்களாக பயன்படுத்த முடியாதிருந்ததுடன், அவற்றை அகற்றுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து இல்லாமல் செய்வதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உலக சுகாதார அமைப்பில் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் 2011 ஆம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து பணிப்பாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டமையால் இது ஓடாமல் கறாஜ் இல் இருந்தது.

4.5 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் மற்றும் திருத்தப்பட்ட 28 ஆவது குறைநிரப்பில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 200 மில்லியனை விட கூடுதலாக பெறுகைகளை அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட குழு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், இருந்தபோதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 757,170,000 தொகையான சோள தேவைப்பாடுகள் தனிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் திணைக்கள பெறுகைகள் குழு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கனிப்பொருட்களை வழங்குதல் தொடர்பான கொள்வனவு நடவடிக்கைகள் 2016 மே 18 இல் ஆரம்பிக்கப்பட்டு அதிலிருந்து 09 மாதங்கள் செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. அதனால், உற்பத்திக்கு உடனடி தேவைப்பாடாகவிருந்த கனிப்பொருட்களின் 82 மெற்றிக்தொன் முன்னைய வருடத்தில் தேவையான கனிப்பொருட்கள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிமிருந்து கொள்வனவு செய்யப்படவேண்டியிருந்தது. மீளாய்வாண்டிற்கான கொள்வனவு நடவடிக்கைகள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டமையாலும் வழங்குனர்கள் தெரிவு செய்யப்படாமையாலும் பழைய வழங்குனர்களிடமிருந்து அதிகூடிய வீதத்தில் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதனால், அப்பணியானது ரூபா 13,612,000 நட்டத்தை கொண்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக தேவையான விற்றமின்களை வழங்குவது தொடர்பாக பெறுகைகள் நடவடிக்கைகள் முறையாக பூர்த்திசெய்யப்பட்டு அதிகுறைந்த விலையை கோரிய வழங்குனர்களிடமிருந்து கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 2,384 இல் 22,000 கிலோகிராம்கள் வருடாந்த தேவைப்பாட்டை கொள்வனவு செய்யப்படாமையால் ஒரு கிலோகிராம் ரூபா 2,397 இற்கு மேற்கொள்ள வேண்டியதுடன் இது ரூபா 286,000 நட்டத்தை ஏற்படுத்தியது.

(ஈ) மீளாய்வாண்டிற்கு தேவையான அச்சிடப்பட்ட பொலித்தீன் றோல் வழங்கல் தொடர்பான கொள்வனவு நடவடிக்கைகள் 2016 மே 16 இல் ஆரம்பிக்கப்பட்டு அச்சிடப்பட்ட பொலித்தீன் இற்காக குறைந்த விலையாக ரூபா 410 ஐ கோரிய வழங்குனர்க்கு பெறுகை நிபந்தனையின் மீறுதலாக வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவானது இரண்டாவதாக குறைவாக விலையை கோரிய வழங்குனரிடமிருந்து

முதலாவது அதி குறைந்த விலையில் பொலித்தீன் கொள்வனவினை சிபாரிசினை செய்திருந்தது. இருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் சிபாரிசுகளினை கருத்தில் எடுக்காமல், இரண்டாவது கொள்வனவு நடவடிக்கைகள் புதிதாக தொடங்கப்பட்டிருந்ததுடன் பத்திரிகை விளம்பரங்களிற்காக ரூபா 56,055 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு செய்முறையிலுள்ள தாமதத்தால் பொலித்தீன் றோல்களின் 25,000 கிலோகிராம்கள் முன்னைய ஆண்டின் போது தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து உடனடி தேவைக்காக 2 சந்தர்ப்பங்களில் கிலோகிராம் ஒன்று ரூபா 418 இற்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன் இது கம்பனிக்கு 200,000 நட்டத்தினை விளைவித்திருந்தது.

(உ) அரச கொள்வனவு வழிகாட்டிகளின் 7.11.1 ஆம் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், தொழில்நுட்ப விதப்புரைகளின் பிரதான ஏற்பாடுகளுக்காக விலைமனுதாரரின் இணக்கத்தை காட்டுவதன் மூலம் ஒப்பிடக்கூடிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருந்த போதிலும், ரூபா *224,562,000* தொகையான இரண்டு வகையான மூலப்பொருட்கள் மற்றும் இரண்டு பொதியிடல் பொருட்களின் கொள்வனவுகளில் அத்தகைய அறிக்கை தயாரிக்காமல் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) அரச பெறுகை வழிகாட்டல்களின் 2.8.1(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது, இந்த விடயத்தின் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவரையும் பெறுகை செய்கையில் போதிய அறிவுள்ள உறுப்பினர் ஒருவரையும் கொண்டிருக்க வேண்டும். இருந்த போதிலும், ரூபா 98,006,000 கிரயமான விற்றமின்கள் மற்றும் கனிப்பொருட்களின் கொள்வனவிற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது அத்தகைய இணைவை உள்ளடக்கியிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்ட பதவியணியினர் கணக்கீட்டு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு திட்டத்தின் அங்கீகாரமில்லாமல் 2015 ஆம் ஆண்டில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(ஆ) கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத ஒருங்கிணைப்பாளர் உத்தியோகத்தர் பதவிக்காக, சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் அமைச்சுசார் 06

உத்தியோகத்தர்களுக்காக கம்பனியால் 2015 ஒக்தோபர் இலிருந்து 2017 பெப்ரவரி வரையான காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். மேலும், அத்தகைய 06 உத்தியோகத்தர்கள் கம்பனியின் சேவைகளுக்கு அறிக்கையிடப்பட்டிருக்காததுடன் அவர்களுடைய சம்பளமாக ரூபா 2,553,000 தொகை 2017 பெப்ரவரி 28 அளவில் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் 150(I)(இ) பிரிவின் பிரகாரம், இரண்டு இயக்குனர்கள் கம்பனியின் ஐந்தொகை திகதி முடிவடைந்து 06 மாதங்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் பூர்த்தி செய்யப்பட்டு சான்றுறுதி செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்பான நிதிக்கூற்றுக்களுடன் அத்தகைய ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கு முடிவடைந்த ஆண்டிலிருந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வின் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை அறிக்கைத்திகதி வரை சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீளாய்வாண்டின் வரைபு வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வு அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2016 தொடக்கம் 2020 வரையான 5 வருடங்கள் காலப்பகுதிக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிதி ஆண்டு ஆரம்பித்து 15 நாட்களுக்கு முன்னர் கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி, சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்**

ஒவ்வொரு நடவடிக்கைக்காக திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்கங்கள், முகாமைத்துவத்தின் பொறுப்பு மற்றும் பௌதீக இலக்குகள் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தெளிவாகவும் நேரடியாகவும் இருக்காததுடன் அதில் நிதி இலக்குகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், பதவியணியினர் ஆட்சேர்ப்புக்காக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கமைப்புகளின் முறையில் நடவடிக்கையொன்றாக இணங்காணப்பட்டிருக்காததுடன், விரிவான தகவல்களின் சார்பாக, மூலதன செலவீனத்தின் வகைப்படுத்தல்கள் மாத்திரம் காலப்பகுதியுடன் தொடர்பாக தந்திரோபாய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**5.4 உள்ளக கணக்காய்வு**

கம்பனியின் அளவிடக்கூடிய மற்றும் தரமான நிதிசார் மற்றும் செயலாற்றல் கணக்காய்வை மேற்கொள்வதற்கு போதிய உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், நியமிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதேநேரம் கணக்குகளின் சரிபார்த்தலில் ஈடுபட்டிருந்தார். மீளாய்வாண்டில் நிதிக் கணக்காய்வு மாத்திரம் அந்த உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**5.5 கணக்காய்வு குழுக்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்கான முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளின் நடத்துவதற்கு வேண்டப்பட்ட கணக்காய்வு குழு கூட்டம் 2017 யூலை 19 இலும் நடைபெற்றிருக்கவில்லை.

**5.6 பெறுகை திட்டம்**

மீளாய்வாண்டின் பிரதான பெறுகை திட்டம் மற்றும் பெறுகை நேர பட்டியல் அரச கொள்வனவு வழிகாட்டிகளின் 4.2.1 ஆம் வழிகாட்டி மற்றும் பெறுகை கையேட்டில் இன் 4.2.1 ஆம் வழிகாட்டியில் வேண்டப்பட்டவாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.7 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 150

நாட்களுக்குள் 2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், இது அறிக்கை திகதியளவிலும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | பயன்படுத்தப்படாத சொத்துக்களை அகற்றுவதற்கும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் தவறியமை. |
| (ஆ) | பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செய்முறை | அரச பெறுகைகள் வழிகாட்டல்களுடன் இணங்காமல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரிக்காமலும் அதற்கான அங்கீகாரத்தை பெறாமலும் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமையும் |

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி